₹100/-

3 - 2

ஞானகுரு

# மகிழ்ச்சி

பிப்ரவரி 2024

எஸ்.கே.முருகன்



## மனித அவதாரங்கள்






ஆசிரியர் பக்கம்

# உங்களை புறக்கணிப்பது யார்...?

தினமும் வாட்ஸ் ஆப்பில் குட்மார்னிங் பதிவு போடும் நபர், ஒரு நாள் போடவில்லை என்றாலும், அவர் புறக்கணிக்கிறாரோ என்று மனிதர்கள் பதட்டப்படுகிறார்கள்.

உறவினர் நேரில் வந்து பத்திரிகை வைக்காமல் போனில் அழைக்கிறார், பணம் வாங்கிய நண்பர் நன்றி சொல்லவில்லை, கடைக்காரர் காலண்டர் தரவில்லை. பக்கத்து வீட்டுப் பெண்ணை கோயிலுக்கு கூட்டிச்செல்லும் தோழி என்னை அழைக்கவில்லை என்றெல்லாம் சாதாரண நிகழ்வுகளையும் புறக்கணிப்பாகக் கருதி வேதனைப்படுகிறார்கள்.

ஒரு விஷயத்தை மறந்துவிடுகிறார்கள். இதேபோன்று நாமும் நிறைய பேரை தினமும் புறக்கணிக்கிறோம்.

படிக்கும் நேரத்தில் பிள்ளை பேசும்போது, ‘இப்ப படிக்கிற வேலையை மட்டும் பார்’ என்று கண்டிப்பது புறக்கணிப்பு. சாப்பிட்டீங்களா என்று கேட்பதற்கு போன் செய்யும் மனைவியிடம், ‘இப்போ இது முக்கியமா?’ என்று கட் செய்வது புறக்கணிப்பு. வாசலில் பூத்திருக்கும் புதிய ரோஜாவை கண்டுகொள்ளாமல் செல்வது புறக்கணிப்பு. கோயில் வாசலில் பிச்சைக்காரர்களை காணாதவர் போன்று நகர்வது புறக்கணிப்பு. ரொம்பவும் உரிமையாகப் பேசும் நபர் தூரத்தில் வருவதைப் பார்த்ததும், பக்கத்து சந்தில் நுழைவது புறக்கணிப்பு.

தான் விஷ் செய்வதை உயர் அதிகாரி பார்த்தும் பார்க்காதது போல் போனதற்கு வேதனைப்படும் ஒருவர், அவரை பார்த்து சல்யூட் அடிக்கும் வாட்ச்மேனுக்கு தலையைக்கூட அசைப்பதில்லை. நம்முடைய புறக்கணிப்புக்கு ஏதேனும் காரணம் வைத்திருப்போம். அதே போன்று பிறர் நம்மை புறக்கணிப்பதற்கும் தெரிந்தும், தெரியாமலும் காரணங்கள் இருக்கலாம், இல்லாமலும் போகலாம்.

புறக்கணிப்பு ஏன் வலி, வேதனை தருகிறது என்றால், ஒருவரை உயர்வாக நினைப்பதாலே அவர் புறக்கணிப்பைக் கண்டு வருந்துகிறோம். சாதாரணமாக நினைப்பவர்கள் புறக்கணிப்பை நாம் பொருட்படுத்துவதே இல்லை.

எனவே, யாரையும் நம்மைவிட உயர்வாக எண்ண வேண்டாம், தாழ்வாகவும் கருத வேண்டாம். யார் பாராட்டுவதாலும், புறக்கணிப்பதாலும் நமக்கு எதுவும் ஆகப்போவதில்லை என்ற உண்மையைப் புரிந்துகொள்ளுங்கள்.



இந்த பிரபஞ்சத்தில் இயற்கையே உயர்வானது. சூரியன், சந்திரன், காற்று, மழை போன்றவை எந்த ஒரு மனிதரையும் புறக்கணிப்பதில்லை. ஆகவே மனிதர்கள் புறக்கணிப்பை கண்டுகொள்ளாமல் கடந்து செல்ல கற்றுக்கொள்ளுங்கள்.

அதுவே, மகிழ்ச்சி.

**ஆசிரியர்**

www.gyaanaguru.com

# ஜோதிடம் யாருக்கு பலிக்கிறது?

ஜோதிடத்தை முழுமையாக நம்பும் மனிதர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஜோதிடம் அப்படியே நடக்கும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஜோதிடர் கூறியது நடக்கவில்லை என்றாலும் அவர்கள் ஜோதிடத்தை பலிப்பதில்லை. தனக்கு இன்னமும் அதிர்ஷ்டம் கிடைக்கும் நேரம் கூடிவரவில்லை என்று தங்கள் விதியின் மீதே பழியை போட்டுக்கொள்கிறார்கள்.

ஜோதிடர் கணிப்பு காரணமாக எத்தனையோ திருமணங்கள் நடக்காமல் நின்று போயுள்ளன, நிறைய மாணவர்கள் மேற்படிப்பு படிக்காமல் போயிருக்கிறார்கள். தொழில் தொடங்க ஆசைப்பட்ட பலர் ஜோதிடர் சொன்னதைக் கேட்டு முதலீடு செய்யாமல் போயிருக்கிறார்கள்.



ஆனால், ஜோதிடத்தைத் தாண்டி தங்கள் மீது நம்பிக்கை வைத்தவர்களே பெரும் வெற்றி அடைந்திருக்கிறார்கள். இந்தியாவின் 'மூன்' மேன் என்று அழைக்கப்படும் அறிவியலாளரும், இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியாற்றியவருமான மயில்சாமி அண்ணாதுரை ஜோதிடம் குறித்து என்ன கூறியிருக்கிறார் தெரியுமா?

மயில்சாமி அண்ணாதுரை:

வானியல் பற்றியும் ஜோதிடம் குறித்தும் என்னிடம் பலரும் கேள்வி கேட்கிறார்கள். ஜோதிடம் குறித்த கேள்விக்கு என்னுடைய சொந்தக் கருத்தைச் சொல்கிறேன். நான் என்னுடைய பதினொன்றாவது வகுப்புத் தேர்வு முடிவுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

அப்போது ஒரு ஜோதிடர் என்னுடைய ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, 'உன் அப்பாவிற்கு மேலே உனக்குப் படிப்பு இல்லை' என்று வாக்கு சொன்னார். அதாவது, என்னுடைய அப்பா பத்தாவது வரை படித்தவர். எனவே என்னால் எஸ்.எஸ்.எல்.சி.க்கு மேல் படித்து தேர்ச்சி அடைய முடியாது என்று சொன்னார்.

அந்த ஜோதிடர் சொன்னது, எந்த அளவிற்கு பலித்தது என்பது இப்போது இந்த உலகத்திற்கே நன்றாகத் தெரியும். என்னுடைய எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் எங்கள் கல்வி மாவட்டத்தி லேயே நான் முதல் மாணவனாக தேர்ச்சி பெற்றேன்.

ஆக, என்னுடைய அனுபவத்தில் ஜோதிடம் என்பது ஒன்றுமேயில்லை. அறிவியல் பூர்வமாகப் பார்த்தால் ஜோதிடமும், வானியலும் ஒன்று இல்லை என்பது என்னுடைய கருத்து.

கேள்வி: திருநள்ளாறு சனீஸ்வரன் கோயில் அருகில் பறக்கும்போது செயற்கைக் கோளில் கோளாறு, தடுமாற்றம் ஏற்படுவதாக சொல்கிறார்களே அது உண்மையா..?

மயில்சாமி அண்ணாதுரை :

இது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 50க்கும் மேற்பட்ட இந்திய செயற்கை கோள்கள் பூமியைச் சுற்றி வருகின்றன. அதில் ஏதேனும் ஒரு செயற்கைக்கோள் எப்போதாவது திருநள்ளாறுக்கு மேலே வந்து போகவே செய்கிறது. அப்போது பாதிப்பு ஏற்பட்டதாக ஒரு தகவலும் இல்லை. இதுவே அறிவியல் பூர்வமான உண்மை.

இம்புட்டுத்தாங்க ஜோதிடம்.

**மந்திரச்சொல்**

தனக்கு அனுபவம் கிடைக்காத வரை யாருடைய அறிவுரையையும் மனம் நம்புவதில்லை.



# 50 வயதில்

## வீட்டை காலி செய்யுங்கள்

மரங்களுடனும் இலைகளுடனும் பேசிக் கொண்டிருந்த ஞானகுருவை சந்திக்க ஒரு குடும்பஸ்தனை அழைத்துவந்தார் மகேந்திரன்.

‘‘சாமி, எனக்கு இன்னையோட 50 வயசு ஆயிடுச்சு… எனக்கு நல்ல வழி காட்டுங்க…” என்று கேட்டு க்கொண்டார்.

‘‘ஆஹா… 50 வயது என்பது மிகச்சரியான வயது. இப்போது நீ வீட்டை காலி செய்யத் தொடங்கு. இப்போதே தொடங்கிவிட்டால் உன் வாழ்க்கை முழுக்க மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்…” என்றார் ஞானகுரு.

‘‘வீட்டை காலி செய்றதுன்னா என்னன்னு புரியலையே… இப்பத்தான் புது வீடு கட்டி குடி போயிருக் கிறேன்” என்று குழப்பமாகப் பார்த்த நபரை, தன் அருகே அமரவைத்து, பேசத் தொடங்கினார் ஞானகுரு.

“பிரபஞ்சம் உனக்கு இந்த உடலை வாடகைக்குக் கொடுத்திருக் கிறது. இதன் மூலம் எத்தனையோ இன்பங்கள், துன்பங்களை அனுபவித்திருப்பாய். இந்த அனுபவங்கள் போதும் என்ற மனநிலை எந்த ஒரு மனிதருக்கும் எந்த வயதிலும் வருவதில்லை. அதனாலே வாழ்க்கை மனிதருக்குப் போராட்டமாக மாறிவிடுகிறது. ஆகவே, போதும் என்ற மனநிலையை நோக்கி மனிதர்கள் ஏதேனும் ஒரு வயதில் நகரத்தான் வேண்டு. அதற்கு 50 என்பது சரியான வயது. ஆகவே, இந்த பிரபஞ்சத்திற்கு நன்றி சொல்லி, உன் சொத்துக்களை கொஞ்சம் கொஞ்சமாக திருப்பிக் கொடுக்கத் தொடங்கு…”

“சாமி… நீங்க சொல்றதைப் பார்த்தா எனக்கு பயமா இருக்குது, சீக்கிரம் நான் சாகப்போறேன்னு ஆருடம் சொல்றீங்களா….” அச்சத்துடன் கேட்டார் குடும்பஸ்தன்.

புன்னகைத்த ஞானகுரு, “ஒரு மரம் பழம் கொடுக்கத் தொடங்கி விட்டது என்றால், அது தன்னுடைய உடலை காலி செய்யத் தயாராகிவிட்டது என்று அர்த்தம். அதற்காக அந்த மரத்தின் ஆயுள் உடனே முடியப் போகிறது என்பதில்லை. அது இன்னும் ஆயிரம் மரங்களாக வாழத் தொடங்கிவிட்டது என்று அர்த்தம். அப்படித்தான் நான் சொல்கிறேனே தவிர, உன் ஆயுளைப் பார்க்கும் ஜோதிடன் நான் இல்லை. 100 வயதுக்கு மேல் நீ இந்த உலகில் வாழப் போகிறாய் என்றாலும் 50 வயது தான் உடைமைகளை காலி செய்வதற்கு சரியான நேரம்…” என்றார் ஞானகுரு.

“அப்படியென்றால், இப்போதே மரணத்துக்குத் தயாராக வேண்டும் என்று அர்த்தம் எடுத்துக்கொள்ளச் சொல்கிறீர்களா…. 60 வயதில்தான் வேலையில் இருந்தே விடுதலை கிடைக்கும்..” என்றார்.

“உன் உடைமைகளை காலி செய்வதற்கும் மரணத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை. எனவே, மரணத்தைப் பற்றிய எண்ணமே வேண்டாம். உன் மனம் எனும் கோட்டைக்குள் நீ கட்டிவைத்திருக்கும் வீட்டையே காலி செய்யச் சொல்கிறேன். அதாவது உன்னிடம் இருக்கும் தேவையில்லாத சுமைகளை கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றச் சொல்கிறேன்…”

“என்னிடம் தேவையில்லாதது எதுவுமே இல்லையே..?”

”அப்படியா..?” என்றபடி அந்த குடும்பஸ்தனை உற்றுப் பார்த்த ஞானகுரு, அவர் கையில் மின்னும் புதிய கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

“உன்னிடம் எத்தனை கைக்கடிகாரங்கள் வைத்திருக்கிறாய்..?”





“இது பிறந்த நாளுக்காக என் மனைவி வாங்கிக் கொடுத்தது. எனக்கு விதவிதமாக கைக்கடிகாரங்கள் அணியும் பழக்கம் உண்டு என்பதால் ஒவ்வோர் ஆண்டும் வாங்கிக் கொடுப்பார். என்னிடம் நன்றாக ஓடிக்கொண்டி ருக்கும் கைக்கடிகாரங்கள் மட்டுமே ஏழெட்டு இருக்கும். பேட்டரி மாற்றாதவை, பழுதானவை என்று பார்த்தால் அது பத்துக்கு மேல் இருக்கும்...” என்றார்.

‘‘நீ கடைசியாக கடிகாரத்தைப் பார்த்து யாருக்காவது சரியான நேரம் சொன்னாயா....?”

‘‘இப்போது எல்லோரும் ஆளுக்கொரு செல்போன் வைத்திருக்கிறார்கள். அதில் நேரம் பார்க்கும் வசதி இருக்கிறது. நானே அதில்தான் பார்த்துக்கொள்கிறேன். கடிகாரம் கட்டுவது ஒரு பழக்கமாகத் தொடர்கிறது, அவ்வளவுதான்...”

‘‘அப்படியென்றால் முதலில் ஓடாத கைக்கடிகாரங்களை ஒவ்வொன்றாக காலி செய். இதன் அர்த்தம் உடனடியாக அத்தனை கடிகாரங்களையும் குப்பையில் போடுவது அல்லது பழைய விலைக்கு விற்பதோ இல்லை. கையில் கடிகாரம் கட்டுவது அவசியம்தானா என்று உன்னை நீயே கேட்டுக்கொள். உனக்கு நிறைய மகிழ்ச்சி கொடுக்கிறது என்றால் அதற்குத் தேவையான எண்ணிக்கையில் மட்டும் கடிகாரங்களை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றவற்றை உனக்கு மகிழ்ச்சி தரும் வகையில் காலி செய்யத் தொடங்கு. அதற்கான வழியையும் தகுதியான நபர்களையும் நீயே கண்டுபிடிக்க வேண்டும்.

உனக்கு தேவையில்லாத ஒன்றை தூக்கியெறியத் தொடங்கி விட்டாலே, நீ வீட்டை காலி செய்யத் தொடங்கிவிட்டாய் என்று அர்த்தம். ஓடாத கடிகாரங்களைப் போன்று உன்னிடம் இன்னமும் தேவை யில்லாத பொருட்கள் எத்தனை இருக்கின்றன என்று தேடிப்பார்.

அளவுக்கு அதிகமான சட்டைகள், தேவைக்கு அதிகமான செருப்புகள், எழுதாத பேனாக்கள், நினைவுச் சின்னமாக கிடைத்த பரிசுகள், சேகரித்த பொக்கிஷங்கள் என்று தேவை யில்லாத எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக காலி செய்யத் தொடங்கு. ஒவ்வொரு பொருள் உன்னைவிட்டு நீங்கும் நேரத்திலும், அதை நீ வாங்கும்போது எத்தனை மகிழ்ச்சி அடைந்தாயோ அதைவிட அதிக மகிழ்ச்சி அடைவாய்...”

‘‘நான் வேலையில் இருந்து ஓய்வு பெற்றதும் அதாவது 60 வயதுக்குப் பிறகு வீட்டை காலி செய்யத் தொடங்கலாமா..?”

‘‘செய்யலாமே... 70 வயதுக்குப் பிறகும் 80 வயதுக்குப் பிறகும் நீ வீட்டை காலி செய்யத் தொடங்கலாம். ஆனால், அப்போது நீ கொடுப்பதை வாங்கிக்கொள்வதற்கு யாரும் இருக்க மாட்டார்கள்...”

“நான் கொடுக்கவில்லை என்றாலும் என் பிள்ளைகள் என்னுடைய ஞாபகார்த்தமாக எல்லாவற்றையும் பத்திரமாக வைத்திருப் பார்களே... அவர்களுக்கு விட்டுச் செல்வது தவறில்லையே..?”

‘‘உன்னுடைய தந்தை உனக்கு என்ன விட்டுச்சென்றார்..?”

‘‘அவருடைய சில புத்தகங்களை இன்னமும் பத்திரமாக வைத்திருக்கிறேன்...”

‘‘அவர் விட்டுச்சென்ற மற்ற பொருட்கள் எல்லாம் எங்கே போயின..?”

‘‘அவை எதற்கும் உதவாத குப்பைகள், அவற்றை எல்லாம் குப்பையில் போட்டுவிட்டோம்...”

‘‘உன் பிள்ளைகளும் அப்படித்தான் செய்வார்கள். உன்னுடைய கைக் கடிகாரத்தை மட்டுமல்ல உன் தொடர்பான எந்த பொருளையும் ஞாபகச்சின்னமாக வைத்திருக்க யாரும் விரும்ப மாட்டார்கள். எனவே, அவற்றை எல்லாம் குப்பையில்தான் போடுவார்கள்.

அவர்களுக்கு உன் பொருட்களை காலி செய்யும் வேலையை நீ கொடுக்க வேண்டாம். இப்போதே தொடங்கினால் 70 வயதுக்குள் முழு வீட்டையும் காலி செய்துவிட்டு எந்த சுமையும் இல்லாத சுதந்திர மனிதனாக இருப்பாய்....”

எந்த பதிலும் சொல்ல முடியாமல் அமைதியாக இருந்தவர், “இன்னும் 20 வருடங்கள் காலி செய்யும் அளவுக்கு என்னிடம் பொருட்கள் இருக்கிறதா..?”

“ஆம், முதலில் உன் பயத்தை வெளியேற்று. உன்னிடம் இருக்கும் அதிகப்படியான பயத்தை, சந்தேகத்தை கொஞ்சம் கொஞ்சமாக காலி செய். உன்னிடம் இருக்கும் அதிகப்படியான கோபத்தை காலி செய். கெட்ட எண்ணங்களை காலி செய். இப்போது உனக்கு மட்டுமே பணிவிடை செய்துகொண்டிருக்கும் உன் மனைவி, நீ ஓய்வு பெற்ற பிறகு பேரப் பிள்ளைகளுக்கு பணிவிடை செய்யத் தொடங்கிவிடுவாள். அவளை போலவே ஒவ்வொரு மனிதரும் உன்னை புறக்கணிக்கத் தொடங்குவார்கள். அதற்கு முன்னரே நீ அவர்களை உன் மனதிலிருந்து காலி செய். இதன் அர்த்தம் அவர்களை வெறுப்பதோ, விரட்டியடிப்பதோ அல்ல, அவர்களை ஒரு வேடிக்கை மனிதராக பார்த்து விலகி நிற்பது தான்...”

”என் மனைவியிடம் இருந்தும் நான் விலகி நிற்க வேண்டுமா....?”

“உன் பெற்றோருடன் மிகவும் நெருக்கமாக இருந்தாய், அவர்கள் இறந்ததும் நீ அவர்களுடன் செத்துப்போக வில்லையே... அப்படித்தான் இனி, நிறைய மனிதர்கள் உன்னைவிட்டு பிரிவார்கள். எல்லா பிரிவுகளையும் நீ வருத்தமின்றி ஏற்க வேண்டுமென்றால் எல்லோரிடமிருந்தும் விலகித் தான் நிற்க வேண்டும்....”

“உன் பெற்றோருடன் மிகவும் நெருக்கமாக இருந்தாய், அவர்கள் இறந்ததும் நீ அவர்களுடன் செத்துப்போக வில்லையே... அப்படித்தான் இனி, நிறைய மனிதர்கள் உன்னைவிட்டு பிரிவார்கள். எல்லா பிரிவுகளையும் நீ வருத்தமின்றி ஏற்க வேண்டுமென்றால் எல்லோரிடமிருந்தும் விலகித் தான் நிற்க வேண்டும்....



## மந்திரச்சொல்

தவறு செய்தவர்களை எல்லாம் ஒதுக்கிவைக்க ஆரம்பித்தால், ஒருவரும் உடனிருக்க மாட்டார்கள்.

“ஏன் இப்படி செய்ய வேண்டும்..?”

“வயதாக வயதாக ஒவ்வொரு மனிதரின் முக்கியத்துவமும் ஒவ்வொரு இடத்திலும் குறையத் தொடங்கும். ஒரு கட்டத்தில் எந்த பொருட்களும் உன் சொந்தமில்லை என்ற உண்மை புரிபடும். அதன்பிறகு இந்த உடலும் உனக்கு சொந்தமில்லை என்பதை அறிவாய். இவற்றை எல்லாம் நீ இயல்பாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால், இப்போதே தேவை இல்லாத பொருட்களை காலி செய்யத் தொடங்கு...” என்று குடும்பஸ்தர் தோளில் தட்டிக்கொடுத்தார் ஞானகுரு.

‘‘காலி செய் என்று எதிர்மறையாகச் சொல்லாமல், இனிமையான வழியில் இதை சொல்லுங்களேன்... அவர் அச்சப்படுகிறார்...” என்றார் மகேந்திரன்.

‘‘சரி, பொருட்களை காலி செய்வதற்கு மனமில்லை என்றாலும் பரவாயில்லை, புதிது புதிதாக பொருட்கள் வாங்கிப் போடுவதையாவது நிறுத்திவிடுங்கள். பணம் இருக்கிறது என்பதற்காக நிறைய நிறைய வாங்கிக்கொண்டே இருப்பதில் எந்த அர்த்தம் இல்லை.

உங்கள் கடந்தகாலத்தை திரும்பிப் பாருங்கள். குடும்ப வாழ்வில் யாரிடமாவது சண்டை போட்டிருந்தால், யாருடைய மனதையாவது புண்படுத்தி இருந்தால் யோசிக்காமல் அவர்களிடம் மன்னிப்பு கேளுங்கள். உங்கள் வாழ்வுக்கு எத்தனையோ பேர் உதவி செய்திருப்பார்கள், அவர்களுக்கு எல்லாம் நன்றி சொல்லுங்கள். யாருக்கேனும் கடன் கொடுக்க வேண்டியிருந்தால், அதனை உடனடியாக கொடுத்துவிடுங்கள்.

சுற்றுலா முடித்து ஊர் திரும்பும் கடைசி நாளில் டாக்ஸி, ரூம் வாடகை, ரெஸ்டாரெண்ட் பில் எல்லாம் முடிப்பது போன்று இந்த பூமியில் உங்களுடைய உடல் தவிர வேறு எதுவும் இல்லாமல் காலி செய்வதற்கான வேலையில் இறங்குங்கள். சுமை இல்லாத பயணமே சுகமானது...” என்றார் ஞானகுரு.

“அப்படியென்றால்...”

“கற்பூரம் முழுமையாக எரிந்து காணாமல் போய்விடுவது போன்று மனிதர்களும் எந்த சுவடுகளும் இல்லாமல் கரைந்துவிட வேண்டும்... அதுவே தனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சி...’’ என்று சிரித்தார் ஞானகுரு. இப்போது குடும்பஸ்தருக்கு பயம் போய் தெளிவு வந்தது.

# உண்மை என்பது யாதெனில்

நமக்கு எது பிடித்திருக்கிறதோ, எது சரியென தோன்றுகிறதோ அதையே உண்மை என்று எடுத்துக்கொள்கிறோம். அதனால் தான் உண்மை என்பது ஆளுக்கு ஆள், நேரத்திற்கு நேரம் மாற்றம் அடைகிறது.

முந்தைய காலத்தில் பூமி நீளமாக இருந்தது என்பது உண்மையாக இருந்தது. இப்போது பூமி உருண்டை என்பது உண்மை. முன்பு இரட்டைக் குழந்தை என்பது கடவுள் கொடுக்கும் வரம். இப்போது கருத்தரித்தல் மையத்தின் மகிமை.

ஆகவே, உண்மை என்பது எப்போதும் உண்மையாகவே இருக்கும் என்பது உறுதியில்லை. ஒரு மாங்கொட்டையை தோட்டத்தில் வீசிவிட்டு நீண்ட காலம் கழித்துவந்து பார்த்தால், அது மாங்கொட்டையாக இருக்காது. அது, ஒரு செடியாக வளர்ந்திருக்கலாம் அல்லது அழுகி மக்கிப் போயிருக்கலாம்.

எனவே, உண்மையை தேடியவர்கள் எல்லாம் தோற்றுத்தான் போயிருக்கிறார்கள். இதிகாசத்தில் இதற்கு ஒரு சுவாரஸ்ய கதை இருக்கிறது என்று சொல்கிறார் ஓஷோ.

ஜனகராஜனக்கு, ‘‘உண்மை என்றால் என்ன?" என்ற கேள்விக்கு விடை காண ஆவல் எழுந்தது. தன் நாட்டில் இருந்த அறிஞர்களை எல்லாம் அழைத்து இதைப்பற்றி வாதங்கள் நடத்தினான். எல்லா அறிஞர்களும் பண்டிதர்களும் ஒன்று திரண்டார்கள்.

ஜெயிப்பவருக்குப் பெரிய பரிசு காத்திருந்தது. ஆயிரம் பசுக்கள் நாட்டிலேயே பிரமாதமான பசுக்கள், தங்கக் காப்பிட்ட கொம்புகள். நகைகள் பூட்டிய கழுத்து. அரண்மனைக்கு வெளியே அலங்கரித்து அணிவகுத்து தின்றிருந்தன ஆயிரம் பசுக்கள். யார் ஜெயிக்கிறாரோ அவருக்குத்தான்.

யாக்ஞவல்கியர் வந்தார். அந்நாளில் மிகப்பெரிய அறிஞர். தன் சீடர்களோடு வந்திருந்தார் மிகவும் மதிக்கப்பட்ட குரு எனவே அவருக்கு ஆணவம் இருந்தது.

மெத்தப் படித்தவர்களுக்கே ஆணவம் உண்டுதானே! தன் சீடர்களைப் பார்த்து, "நீங்க போய் அந்த மாடுகளைப் பிடிச்சுக்குங்க. நான் போய் வாதிலே ஜெயிச்சுட்டு வந்துடறேன். வெய்யில் அதிகமா இருக்குது. பாவம் மாடுகள். நீங்க போய் நிழலுக்கு ஓட்டிக்கிட்டுப் போங்க" என்றார்.

அத்தனை தூரம் ஜெயித்துவிடுவோம் என்ற நம்பிக்கையுடன் இருந்தார்.

அறியாமைதான் எதையும் நிச்சயமாக இருக்கும். ஞானம் எப்போதுமே தயங்கித் தயங்கித்தான் படரும். எதையும் தீர்மானிப்பதில்லை.



உண்மை எது என்ற கேள்வி சற்றே சிக்கலானது. யாருக்குத் தெரியும் விடை?

யாகஞவல்கியர் மிகப்பிரமாதமாக ஒரு விளக்கம் கொடுத்தார். அந்த விளக்கம் ஏதோ சொல்ல வந்தது என்றாலும் எதையும் சொல்லவில்லை. உண்மையைத் தேடிய அறிஞர்கள் மனம் நொந்து கொண்டார்கள் ஆனால் பாவம் அவர்கள் என்ன செய்ய முடியும்? இவரை வாதத்தில் வெல்ல முடியாதே! வாதத்தில் பிரமாதமானவர் அவரை வென்றவர் எவருமில்லை.

அவரே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

ஆனால் அதுவரை அமைதியாக இருந்த மைத்ரேயி எழுந்தார்.

“பொறுங்கள் நான் சில கேள்விகள் கேட்க வேண்டும்.” என்று சில கேள்விகள்



கேட்டார். அவை அந்நாளில் வெகு சாதாரணமான கேள்விகள். உண்மையில் சாதாரண கேள்விகள்தானே பதிலளிக்க வெகு சிரமமானவை!

இந்த உலகைத் தாங்கி நிற்பது எது? அல்லது யார்?"

இந்திய மரபில் உலகைத் தாங்கி நிற்பவை ஏழு பெரிய வெள்ளை யானைகள். எனவே யாக்ஞவல்கியரும் அதே பதிலைச் சொன்னார். சொல்லிவிட்டு, இதுகூட தெரியாத அறிவிலியா நீ? என்று கேட்டார்.

மைத்ரேயி விடவில்லை, சரிதான் அந்த யானைகளைத் தாங்கி நிற்பது யார் அல்லது எது?"

இப்போது அவருக்கு ஏதோ விஷமம் இருக்கிறது என்பது தெரிந்துவிட்டது. சுதாரித்துக் கொண்டார். ’பிரம்மா! கடவுள்!" என்றார். இதோடு நிறுத்திக் கொள்வார் என்றுதான் நினைத்தார்.

மைத்ரேயி தொடர்ந்து, "அப்படியானால் கடவுள் யார்மீது நிற்கிறார்? அல்லது எதன்மீது?" என்றார்.

யாக்ஞவல்கியருக்குக் கோபம் வந்துவிட்டது. "பெண்ணே! இதோடு நிறுத்திக்கொள். இனியும் பேசினால் உன் தலை தரையில் உருண்டு விடும். என்னுடைய கோபத்திற்கும் சாபத்திற்கும் ஆளாகிவிடுவாய், இந்த அரசவையே அழிந்து விழும்" என்று கொதித்தார்.

மைத்ரேயி உடனே அமைதியாகப் போய்விட்டார். அரசரும் யாக்ஞ்வல்கியர் வெற்றி பெற்றதாகச் சொல்லிவிட்டார்.

இங்கே மைத்ரேயி அமைதியானார் என்றாலும், தோற்றுப் போகவில்லை. உண்மையில், யாக்ஞவல்கியர்தான் தோற்றுப் போனவர். ஆனால், அதை சொல்வதற்கு யாருக்கும் தைரியம் இல்லை. ஆகவே, பொய் வெற்றி பெற்றது.

அங்கிருந்து வெளியேறும் முன்பு மைத்திரேயி ஜனகராஜனை பார்த்து, “நீங்கள் எவ்வளவு யோசித்து, சிந்தித்து, வாதம் செய்து முடிவெடுத் தாலும், அது உண்மைக்கு நெருக்கமானதாகாது. உண்மை வேறு ஒன்றாகத்தான் இருக்கும்...” என்றபடி வெளியேறினார்.

அதுதான் உண்மை.



www.gyaanaguru.com



## சினிமா எனும் வாழ்க்கை

# நீ எதை தேடுகிறாயோ, அது உன்னை தேடிக்கொண்டு இருக்கிறது

ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு தனித்தன்மை இருப்பது போல, ஒவ்வொரு சினிமாவுக்கும் தனி முகம் உண்டு. ஒவ்வொரு சினிமாவும் ஒரு புத்தம் புதிய உலகத்தை தரிசிப்பதற்கான ஒரு விசா.

நம்மால் முடியாத ஒன்றை ஒரு கதாநாயகன் செய்து முடிப்பதைக் காணும் ரசிகன், மகிழ்ச்சியின் உச்சத்துக்குப் போகிறான். தீமை செய்பவனை அடித்து நொறுக்கும் நடிகரை தன்னுடைய தலைவனாக ஏற்றுக்கொள்கிறான். தன்னால் காதலிக்க முடியாத நிலையில், திரையில் இரண்டு பேர் உருகி உருகி காதலிப்பதைக் கண்டு நெகிழ்கிறான்.

பொழுதுபோக்கு, வணிகம் என்பதற்காகவே திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன என்றாலும், அந்த எல்லையைத் தாண்டி சில திரைப்படங்கள் நம்பிக்கையூட்டும் நல்ல செய்தியை சொல்கின்றன. அப்படியொன்றாக, 'சேஷம் மைக்கில் ஃபாத்திமா' எனும் மலையாள திரைப்படம் மலர்ந்திருக்கிறது. ஒரு பெண்ணால் எதையும் சாதிக்க முடியும் என்பதை போகிற போக்கில் ஜாலியாக சொல்லியிருக்கும் விதத்தில், இது ஒரு முக்கியமான திரைப்படம்.

ஒரு சின்ன கிராமத்தில் பிறந்து வளர்ந்த சாதாரண வாயாடி பெண், எத்தனை சிரமமான போராட்டங்களைத் தாண்டி கால்பந்து வர்ணனையாளராக மாறுகிறார் என்பதுதான் ஒரு வரிக் கதை. ஃபாத்திமா எனும் கதாபாத்திரத்துக்கு உயிர் கொடுத்து, அந்த கேரக்டரை அதகளப்படுத்தியிருக்கிறார் கல்யாணி பிரியதர்ஷன்.

மலப்புரத்தின் பழைமையில் ஊறிய ஒரு இஸ்லாமியக் குடும்பத்தில் இரண்டாவது

www.gyaanaguru.com






> உண்மையில் அவள் மனதுக்குள் வேறு ஓர் ஆசை தீவிரமாக இருக்கிறது. அதாவது, கேரளா வின் ஐ.எஃப்.எல். கால்பந்து போட்டிக்கு வர்ணனை யாளராக வேண்டும் என்று ஆசைப்படு கிறாள். இந்த மூன்று மாத காலங் களுக்குள் வீட்டுக்குத் தெரியாமல் எப்படி யாவது அந்த ஆசையை நிறைவேற்றிவிடத் துடிக்கிறாள்.

பெண்ணாகப் பிறக்கிறாள் கல்யாணி. இந்த காலத்துக்கு குழந்தைகள் ரொம்பவே வாயாடுகிறார்கள். ஆனால், பள்ளிக்குப் போனதும் அவர்களுடைய வாய் ஆசிரியர்க ளாலும், பெற்றோர்களாலும் அடக்கப்பட்டு விடுகிறது. கல்யாணியும் எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்கும் ரகம். ஆனால், அந்த குணம் மாறாமலே வளர்கிறாள்.

அவள் கேள்விக்குப் பயந்தே அவளை தொலைக்காட்சி பக்கம் விரட்டிவிடுகிறார்கள். எல்லா நேரமும் தொலைக் காட்சி பார்க்கும் கல்யாணி, புரியாத மொழியில் பார்க்கும் கார்ட்டூன் கேரக்டர்களுக்கும், கால்பந்து போட்டிகளுக்கும் அவளாகவே வர்ணனை செய்து, அவளாகவே கேட்டுக்கொள்கிறாள். அவளுடைய குரல் அவளுக்கு ரொம்பவே பிடித்துப் போகிறது. ஆகவே, பேசிக்கொண்டே இருக்கிறாள். கேள்வி கேட்டுக்கொண்டே இருக்கிறாள்.

ஊருக்குள் அவளுடைய அண்ணன் ஏற்பாடு செய்யும் ஒரு கால்பந்து விளையாட்டுப் போட்டிக்கு வரவேண்டிய வர்ணனையாளர் எஸ்கேப் ஆகி சொதப்பிவிடவே, அவசரத் துக்கு கல்யாணியைக் கூப்பிட்டு பேச வைக்கிறார்கள். ஸ்டேடியத்தையும் பந்தையும் கண்டதும் கல்யாணி தன்னை மறந்து கால்பந்து உலகத்திற்குள் நுழைந்து விடுகிறாள். பேசுகிறாள், பேசுகிறாள், பேசிக்கொண்டே இருக்கிறாள். அத்தனை பேரும் பாராட்டுகிறார்கள்.

வீட்டில் கல்யாணப் பேச்சு எடுக்கிறார்கள். மாப்பிள்ளை யாக வருபவரிடம் கல்யாணி கேள்வி மேல் கேள்வி கேட்க,

> **மந்திரச்சொல்**
>
> சொர்க்கம் செல்ல எல்லோருக்கும் ஆசை தான். ஆனால், மரணமடைய ஒருவரும் விரும்புவதில்லை.

அவன் ஓடியே போகிறான். இதனால் அப்பா ரொம்பவே அப்செட் ஆகிறார்.

இந்த நேரத்தில் கொச்சியில் ஒரு பயோ டெக் கம்பெனியில் மூன்று மாதம் மட்டும் வேலை பார்க்கும் ஒரு வாய்ப்பு கல்யாணிக்குக் கிடைக்கிறது. வீட்டில் மிகவும் சிரமப்பட்டு ஒப்புதல் வாங்கி கொச்சி போகிறாள்.

உண்மையில் அவள் மனதுக்குள் வேறு ஓர் ஆசை தீவிரமாக இருக்கிறது. அதாவது, கேரளாவின் ஐ.எஃப்.எல். கால்பந்து போட்டிக்கு வர்ணனையாளராக வேண்டும் என்று ஆசைப் படுகிறாள். இந்த மூன்று மாத காலங்களுக்குள் வீட்டுக்குத் தெரியாமல் எப்படியாவது அந்த ஆசையை நிறைவேற்றிவிடத் துடிக்கிறாள்.

விளையாட்டுத்துறை அமைச்சர் பீனா ஜானியை சந்திக்கிறாள் கல்யாணி. ஆணாதிக்கம் நிறைந்த பீனா ஜானியால், ஒரு பெண் கால்பந்து வர்ணனையாளராக இருக்க முடியும் என்ற சிந்தனையையே ஏற்க முடியவில்லை. ஆகவே, விரட்டியடிக்கிறார்.

எப்படியும் லட்சியத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசையில் தோழி கேத்ரின் உதவியுடன் ஒரு ஸ்போர்ட்ஸ் அகாடமியில் வேலைக்குச் சேர்கிறாள். கால்பந்து வீரன் சாலமன் கல்யாணிக்கு உதவி செய்ய ஆசைப்படுகிறான். ஆனால், எல்லா உதவிகளும் வீணாகிப் போகின்றன.

ஐ.எஃப்.எல். கமிட்டியின் முக்கிய மெம்பரான சிவாவை பார்த்து தன்னுடைய திறமையைக் காட்டிவிட்டால், நிச்சயம் வர்ணனையாளராகிவிட முடியும் என்று நம்புகிறாள். அதற்கு எப்படி வாய்ப்பு கிடைக்கிறது, அந்த வாய்ப்பை எப்படி சரியான கோல் ஆக்கி லட்சியத்தில் வெற்றி பெறுகிறாள் என்பதையே கதை ஜாலியாக விளக்குகிறது.

இந்த படத்தில் நம்பிக்கையூட்டும் ஒரு விஷயம் என்னவென்றால், தன்னம்பிக்கை இருக்கும் நபர், எந்த ஒரு தருணத்திலும் எதற்காகவும் தன்னுடைய இலக்கை விட்டுத்தர மாட்டார் என்பதை ஆணித்தரமாக சொல்லியிருப்பதுதான். அதனை கல்யாணி திரையில் அத்தனை அட்டகாசமாக கொண்டுவந்திருக்கிறார்.

கல்யாணியின் ஆசைக்கு உதவி செய்கிறேன், ஆனால் என்னுடைய ஆசையை தீர்த்துவை என்று ஜொள்ளு விடும் முக்கிய மனிதரையும் கல்யாணி சந்திக்கிறாள். சிரித்த முகத்துடன் அவனை வீடியோ எடுத்துக்கொள்கிறாள். உன்னுடைய மகளிடம் இந்த விஷயத்தை சொல்லிவிடவா என்று கேட்டு அவனை தெறிக்க விடுகிறாள்.

அதேபோல், தன்னுடைய லட்சியத்தை அண்ணன், அப்பா ஆகியோர் புரிந்துகொள்ளவில்லை என்ற போதும் அவர்களை கல்யாணி எதிரியாகப் பார்ப்பதில்லை. தன்னுடைய லட்சியத்தை நிறைவேற்றுவேன் என்று மட்டும் உறுதியாகச் சொல்கிறாள்.

ஒரே அடியில் கல்யாணியை மயக்கமடையச் செய்து வேனில் கூட்டிச்செல்லும் நேரத்தில் கண் விழிக்கிறாள் கல்யாணி. அந்த நேரத்திலும் அடித்துவிட்டதற்காக கொஞ்சமும் கோபம் கொள்ளாமல், ‘என்னா அடிப்பா.... என்னை நீங்க வலுக்கட்டாயமா கூட்டிட்டுப் போனாலும் நான் திரும்பி இங்கே தான் வரப்போகிறேன்...’ என்று உறுதியாகச் சொல்கிறாள்.

“கல்யாணம் செஞ்சு வைச்சிடலாம், அப்புறம் எப்படி வருவான்னு பார்க்கலாம்...” என்று கூறும் உறவினரிடம், “கல்யாணம் செஞ்சு வைச்சாலும் ஓடித்தான் வருவேன்...” என்கிறாள் கல்யாணி.

“முதலிரவு முடிஞ்சிட்டா... அப்புறம் என்ன பண்ணுவ...?” என்று அந்த உறவினர் கிண்டலாகக் கேட்க, கொஞ்சமும் அசராமல், “என்னை கட்டிப் போட்டு முதலிரவு முடிச்சாலும், எழுந்து இங்கே தான் வருவேன், எனக்கு இன்னைக்கு ஒரு ஃபைனல் இண்டர்வியூ இருக்குது, உடனே போகணும்....” என்கிறாள்.

அவளது உறுதியைக் கண்டு அந்த அப்பாவும் உதவி செய்கிறார். ஒருவரையொருவர் நேசிக்கும் குடும்பத்தில் எல்லாமே சாத்தியமே என்பதைச் சொல்கிறது இந்த மலையாளத் திரைப்படம். எல்லோரும் எதையேனும் சாதிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால், சாதிக்க நினைப்பவருக்கு அத்தனை பேரும் வழி காட்டவேண்டும், அத்தனை பேரும் துணை நிற்க வேண்டும் என்பதை குடும்பக் காவியம் போன்று இயல்பாகச் சொல்லும் விதத்தில், இது ஒரு முக்கியமான திரைப்படம்.

ஒரு பெண்ணுக்கு எத்தனை உறுதி வேண்டும், எப்படி தனித்தன்மையுடன் திகழ வேண்டும், கோபத்தைக் காட்டாமலும் எப்படி எதிர்ப்புகளை சமாளிக்கலாம் என்பதை எல்லாம் இன்றைய பெண் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லித்தருகிறாள் கல்யாணி. கொஞ்சமும் குரல் உயர்த்தாமல், அழுது புலம்பாமல், சண்டை போடாமல் எல்லா எதிர்ப்புகளையும் அவரது வழியிலே சென்று ஜெயித்துக் காட்டுகிறார்.

ஃபுட் பாலில் ரெயின் போ ஷாட் என்று ஒரு கோலை மட்டும் ஏன் பாராட்டுகிறார்கள் என்பதற்கு அறிவியல் ரீதியான விளக்கத்தை உணர்வுபூர்வமாகப் பேசும் இடத்தில் உள்ளத்தை கொள்ளையடிக்கிறாள்.

அதுசரி, படத்தில் வேறு என்ன இருக்கிறது..? கல்யாணி இருக்கிறார், அதுவே போதும். திரையில் அல்லது ஓடிடியில் கல்யாணியை கண் நிறைய பார்த்து மகிழுங்கள். மனசும் மகிழ்ந்துபோகும்.


www.gyaanaguru.com

# ஓட்டு கேட்டு வருகிறார் அயோத்தி ராமர்..!



**அத்தியாயம்-26**

ஒரு பக்கம் ஏழ்மை, ஒரு பக்கம் அளவுக்கதிக செல்வம் எனும் சமநிலை இல்லாத வாழ்க்கை மனிதருக்கு மட்டுமே அமையப்பெற்றுள்ளது. வேறு எந்த உயிரினமும் அனுபவிக்காத விந்தையான சூழலை அத்தனை நாட்டு மக்களும் அனுபவிக்கிறார்கள்.

மனிதன் பகுத்தறிவு படைத்தவன், உயர் ஆற்றல் பெற்றவன் என்றெல்லாம் பெருமையடித்துக் கொண்டாலும், ஒருவரையொருவர் சமமாகக் கருத வேண்டும், ஒருவருக்குக் கிடைத்திருக்கும் வசதி எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்ற சிந்தனையை நோக்கி மனிதர்கள் நகர்வதில்லை.

10 ஆயிரம் அடிக்கு பெரிய பங்களா கட்டி, அதில் கணவன், மனைவி மட்டுமே வசிக்கும் அதே நகரில், 10க்கு 10 அடி அறையில் ஏழெட்டு நபர்கள் குறுக்கும் நெடுக்குமாகப் படுத்துத் தூங்கி வாழ்க்கையை நகர்த்துகிறார்கள். இருதரப்பட்ட மக்கள் வாழ்க்கையும் முற்றாக முரண்பட்டவை.

உணவுக்கு கஷ்டப்படும் மனிதர்கள் எத்தனை சம்பாதித்தாலும் அது போதுமானதாக இருப்பதில்லை. எனவே, ஓய்வெடுக்கவும், பொழுதுபோக்கவும் நேரமே இல்லாமல் ஓடிக்கொண்டு இருக்கிறார்கள்.

அதுவே பணம் படைத்தவர்கள் இல்லத்தில் தலைகீழாக நடக்கிறது. நிறைய பணம் வைத்துக்கொண்டு அதன் மூலம் மேலும் அதிக பணம் சம்பாதித்து, அவற்றை செலவழிக்க வழியில்லாமல் தவிக்கிறார்கள். வீட்டுக்குத் தேவையான எல்லா பொருட்களையும் வாங்கிக் குவித்துவிட்டதால், அடுத்து என்ன வாங்குவது என்பது புரியாமல் தவிக்கிறார்கள். எல்லா வகையான பொழுதுபோக்கையும் அனுபவித்துவிட்டதால், புதிதாக எப்படி பொழுதுபோக்குவது என்பதும் தெரிவதில்லை.

www.gyaanaguru.com

ஆழ்மனமே தாழ் திறவாய்!





www.gyaanaguru.com

அப்படியொரு தம்பதியே, அவ்வப்போது காணாமல் போகும் கண்ணாமூச்சு விளையாட்டு நடத்துவதை கடந்த இதழில் பார்த்தோம். கணவனுக்குத் தெரியாமல் மனைவியும், மனைவிக்குத் தெரியாமல் கணவனும் அவ்வப்போது எங்காவது ஜாலி டூர் அடித்துவிட்டு வருவதும், அதனால் தங்கள் வாழ்க்கைக்கு ஒரு புதிய அர்த்தம் கிடைப்பதாகச் சொல்கிறார்கள் என்பதைப் பார்த்தோம்.

அவர்கள் செல்வது சரியான பாதையா என்று கேட்டிருந்தோம். கண்டிப்பாக சரியான வழிமுறை அல்ல. ஏனென்றால், ஒவ்வொரு மனிதனும் இயற்கையின் சொத்து. அவன் கூழாங்கல்லாக இருப்பதைவிட, விதையாக இருப்பதே அவனுக்கும் அவனை சார்ந்திருப்பவர்களுக்கும் மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கும்.

கணவனும் மனைவியும் கண்ணாமூச்சு ஆடுவது அவர்களுக்கு கொஞ்ச காலம் சுவாரஸ்யமாக இருக்கலாம். ஆனால், இந்த விளையாட்டும் சீக்கிரமே போரடித்துப் போய்விடும். ஏனென்றால், அவர்கள் வாழ்க்கையில் வேறு யாருக்கும் பங்கு இல்லை, பயனும் இல்லை. இன்னும் குறிப்பிட்டு தெளிவாகச் சொல்வது என்றால், இயற்கைக்கு அவர்கள் எந்த உதவியும் செய்யவில்லை. அதாவது கூழாங்கல்லாக இருக்கிறார்களே தவிர, விதையாக இருப்பதில்லை.

ஒரு நிலத்தில் கூழாங்கல்லை தூக்கி எறிந்துவிட்டு, பல வருடங்கள் கழித்து வந்து பார்த்தாலும் பெரிய மாற்றம் எதுவும் நிகழ்ந்திருக்காது. ஆனால், விதையைப் போட்டுவிட்டு பல வருடங்கள் கழித்து பார்த்தால், அங்கே ஒரு தோப்பு உருவாகியிருக்கவும் வாய்ப்பு உண்டு.

அதனாலே, தங்களிடம் அளவுக்கு மீறி குவிந்திருக்கும் செல்வத்தை பிறருக்கும் கொஞ்சம் கொடுத்து வாழ்வதே அவர்களுடைய வாழ்வுக்கு புதிய அர்த்தம் தருவதாக இருக்கும்.

அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை எதற்காக பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்கலாம். கண்டிப்பாக அவர்கள் உழைத்து சம்பாதித்த பணம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால், தனி நபர்களாக அவர்கள் எதுவும் சம்பாதிக்கவில்லை. அவர்களுக்கு இந்த சமூகமே கல்வி கொடுத்தது, அவர்களுக்கு இந்த சமூகமே வேலை தருகிறது, அவர்களுடைய உணவு, உடை, வாகனம், பொழுதுபோக்கு என்று எல்லாமே சமூகத்தினால் கொடுக்கப்படுகிறது. ஆகவே, தங்கள் வருமானத்தில் கொஞ்சத்தை சமூகத்திற்குத் திருப்பித் தருவதில் தவறு இல்லை.

முதலில் அவர்கள் ஓய்வு நேரத்தை பிறருக்குத் தரலாம். அதாவது வறுமை நிலையிலிருந்து படிக்க கஷ்டப்படும் பாமரப் பிள்ளைகளுக்கு இலவசமாக டியூசன் எடுக்கலாம். ஊர் சுற்றுவதற்கு ஆகும் பணத்தில் கொஞ்சத்தை இல்லாதவர்கள் முன்னேற்றத்துக்கு முதலீடு செய்தால், ஏழைக் குழந்தையின் உயர் படிப்பே முடிந்துவிடும்.

## மந்திரச்சொல்

நமக்கு வரும் கவலைகளில் 99 சதவீதம் நியாயமற்ற கற்பனைகளால் தான் வருகின்றன.

தனி நபராக சேவை செய்யும்போது யாரேனும் ஏமாற்றிவிடலாம், தவறான கைக்கு உதவி போய் சேர்ந்துவிடும் என்று யோசித்தால், அரசு பள்ளிகளை தேடிச் சென்று அங்கு டாய்லட் வசதி, மின்சார வசதி, ஆர்.ஓ. தண்ணீர் வசதி போன்ற சின்னச்சின்ன உதவிகள் செய்து தரலாம். இதுபோன்ற உதவிகள் செய்வதால் அவர்களுக்கு எதிர்காலம் சிறப்பாக இருக்கும், தர்மம் தலை காக்கும் என்றெல்லாம் யோசிக்க வேண்டியதில்லை, தங்களால் முடிந்ததை பிறருக்குக் கொடுப்பதை மகிழ்ச்சியாக அனுபவிக்க வேண்டும்.

தங்கள் வாழ்க்கை இருட்டாக இருக்கிறது என்று கவலைப்படுவதைவிட, ஒரு விளக்கு ஏற்றி வைப்பது மேல் என்பதை உணர வேண்டும். எத்தனையோ மனிதர்கள் தனிமையில் வாடுகிறார்கள். முதியோர் இல்லங்கள் போதிய இடவசதி இல்லாமல் தத்தளிக்கின்றன. படிக்க ஆர்வம் இருந்தும் மேற்கொண்டு படிப்பதற்கு வசதி இல்லாமல் நிறைய இளைஞர்கள் தடுமாறுகிறார்கள். உடல் ஊனமுற்றவர்கள் எத்தனையோ பேர் இயல்பான வாழ்க்கையை எதிர்கொள்ள முடியாத சூழலில் தடுமாறுகிறார்கள். மருத்துவம் பார்க்க வழியின்றி எத்தனையோ பேர் மரணம் தழுவுகிறார்கள்.

இப்படிப்பட்ட அடித்தட்டு மனிதர்கள் வாழ்க்கைக்கு ஒளியைக் காட்டுவதன் மூலம், பணம் வைத்திருப்பவர் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாறிவிடும். பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை வந்துவிட்டால், பொழுது போகவில்லை என்ற பேச்சுக்கே இடம் இருக்காது. உடல், மனம் இரண்டும் சுறுசுறுப்பாகிவிடும். ஆகவே, பணம் வைத்திருப்பவர்கள் அதை செலவழிக்கவும் அறிந்துகொண்டால் மட்டுமே, அவர்கள் வாழ்வு மகிழ்ச்சியை நோக்கி பயணிக்கும்.

ஒவ்வொரு தனி மனிதரையும் அவரது ஆழ்மனம் ஆட்டுவிக்கிறது என்பதை பார்த்துவருகிறோம். தனி மனிதரைப் போலவே ஒரு பெரும் கும்பலை, பெரும்





# ஓட்டு கேட்டு வருகிறார் அயோத்தி ராமர்..!

எண்ணிக்கையிலான மனிதர்களையும் ஆழ்மனம் மூலம் அடிமைப்படுத்த முடியும் என்பது ஆய்வுபூர்வமாக இப்போது உறுதியாகிவிட்டது. இதற்கு தகவல் தொழில்நுட்பம் உதவி செய்கிறது.

உதாரணத்துக்கு, உங்கள் வீட்டைச் சுற்றிலும் த்ரி ரோசஸ் டீ குறித்து புதிய விளம்பரங்கள் ஒட்டப்படுகின்றன, நீங்கள் பார்க்கும் விளம்பரங்களில் எல்லாம் த்ரி ரோசஸ் டீ காட்டப்படுகின்றன என்றால், கடையில் நுழைந்ததும் நீங்கள் வழக்கமாக வாங்கும் டீயை தேர்வு செய்யாமல், த்ரி ரோசஸ் டீயை தேர்வு செய்வதற்கே அதிக வாய்ப்பு உண்டாகிறது. இதுவே தொழில்நுட்பத்தின் அராஜக சாதனை.

இந்த தொழில்நுட்பம் இப்போது அரசியல் கட்சிகளுக்கு உதவி செய்கிறது. யார் ஒரு நாட்டை ஆட்சி செய்வது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக தொழில்நுட்பம் மாறியிருக்கிறது.

முன்பு கட்சியின் கொள்கைகளும், பொதுக்கூட்ட மேடைகளில் பேசப்படும் கருத்துக்களும் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்திகளாக இருந்தன. அதன்பிறகு தேர்தல் அறிக்கைகள் வெற்றி வாய்ப்பை தீர்மானிக்கும் சக்தியாக இருந்தன. கலர் டி.வி. கொடுப்பதாகச் சொல்லி ஆட்சியைப் பிடித்த சம்பவம் தமிழகத்தில் நடந்தேறியிருக்கிறது.

அதன் பின்னர் பணம் கொடுத்து வாக்குகளை வாங்கிவிட முடியும் என்ற நிலை இருந்தது. இப்போது ஒட்டுமொத்த உலகமும் டிஜிட்டலுக்கு மாறிவிட்டது. ஆம், இப்போது தேர்தல் வெற்றிகளைத் தீர்மானிக்கப்போவது கட்சி, கொள்கைகள், பணம் அல்ல, முழுக்க முழுக்க டிஜிட்டல் தொழில் நுட்பம்.

ஆம், எந்த கட்சி மிகச்சிறப்பாக டிஜிட்டல் தொழில் நுட்பத்தைக் கையாள்கிறதோ, அந்த கட்சி வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு.

உலக அளவில், டிஜிட்டல் தொழில்நுட்பத்தைக் கொண்டு வெற்றி அடைந்த முதல் தலைவர் என்றால், அவர் அமெரிக்காவின் பராக் ஒபாமா. அவர் வெற்றி பெற்ற நேரத்தில், ‘எங்களிடம் போதிய பணம் இல்லை, ஆட்களும் இல்லை. ஆகவே, டிஜிட்டல் தொழில்நுட்பம் மூலம் எங்களுடைய வியூகங்களை வடிவமைத்து வெற்றி அடைந்தோம்’ என்று வெளிப்படையாகவே அவரது வியூக அமைப்பாளர்கள் பேட்டி கொடுத்தார்கள்.

அதாவது பராக் ஒபாமாவை தேர்ந்தெடுத்தால் எத்தனை நன்மை கிடைக்கும் என்றும், அவர் எப்பேர்ப்பட்ட நல்லவர், வல்லவர் என்று எஸ்.எம்.எஸ்., இமெயில், ஃபேஸ்புக் போன்ற பல்வேறு வழிகளில் ஏராளமான மக்களை மறைமுகமாகத் தொடர்பு செய்துகொண்டே இருந்தனர்.

ஒருவருக்கு முன்பு பராக் ஒபாமா பற்றி நிறைய நிறைய தகவல்களை கொட்டிக்கொண்டே இருந்தால், ஒரு கட்டத்தில் அவர் பராக் ஒபாமா பற்றி சொல்வது எல்லாம் உண்மை என்று நம்பத் தொடங்கிவிடுவார். அவரது ஓட்டையும் அவருக்கே செலுத்திவிடுவார். அப்படித்தான் ஒபாமா ஆட்சியைப் பிடித்தார்.

வரும் 2024ம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் மட்டுமின்றி இந்திய தேர்தலிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பெரிய அளவில் தாக்கம் ஏற்படுத்தப் போகிறது.

உண்மையை பெரிதாக்கிச் சொல்வது மட்டுமல்ல, பச்சையாக பொய் சொல்வதும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஒரு பகுதியே. ராகுல் காந்தி ஏழையின் வீட்டில் உணவு சாப்பிடும்போது, கைக்கு சானிடைஸர் போட்டுக் கொண்டார். அந்த வீட்டில் ஏற்கெனவே வாங்கி வைக்கப்பட்டிருந்த ஹோட்டல் உணவையே சாப்பிட்டார் என்று ஒரு வீடியோவை சில பொய்யான ஆதாரங்களைக் காட்டி பதிவேற்றிவிட முடியும்.

அது உண்மையா, பொய்யா என்று ஆய்வு செய்வதற்குள் அந்த வீடியோ இந்தியா முழுக்க சுற்றி வந்துவிடும். ஒரு கட்டத்தில் அந்த வீடியோ பொய்




என்று கண்டறியப்பட்டு நீக்கப்பட்டாலும், அது லட்சக்கணக்கான நபர்களின் செல்போனிலும் கம்ப்யூட்டரிலும் ஸ்டோர் ஆகியிருக்கும். ராகுல் பற்றி நிறைய நபர்கள் வைத்திருந்த நம்பிக்கையை அது உடைத்திருக்கும். வீடியோ பார்த்த அத்தனை பேரிடமும் மீண்டும் போய், அந்த வீடியோ பொய்யானது என்று யாரும் சொல்லிவிட முடியாது. அந்த வீடியோ என்ன நோக்கத்தில் உருவாக்கப்பட்டதோ, அது நிறைவேறிவிட்டது.

வெற்றியை மட்டும் குறியாக வைத்து நடக்கப் போகும் ஒரு வித்தியாசமான தேர்தலை இந்த ஆண்டு இந்தியா சந்திக்க இருக்கிறது. இந்த தேர்தலில் பா.ஜ.க.வுக்கு இரண்டு சாதக அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று பணம். கடந்த 6 ஆண்டுகளில் மட்டும் பா.ஜக.வுக்கு தேர்தல் பத்திரங்கள் மூலமாக கிட்டத்தட்ட 16 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது. அடுத்தது ராமர் கோயில்.

இந்திய தேர்தலில் முதன்முறையாக இந்து மதத்தைச் சேர்ந்த அயோத்தி ஸ்ரீராமர் நேரடியாக பா.ஜ.க.வுக்காக களம் இறங்கி வாக்கு சேகரிக்கப் போகிறார். கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்வதை தங்கள் வாழ்நாள் சாதனையாக பா.ஜ.க. சொல்லி பெருமைப்படுகிறது.

ராமர் கோயில் கட்டிய பா.ஜ.க.வுக்கு ஓட்டுப் போட வேண்டிய கடமை ஒவ்வொரு இந்துக்களுக்கும் இருக்கிறது என்பதுதான் பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கை. இந்துவாக இருக்கும் ஒருவர் இதில் எப்படி குற்றம் காண முடியும்..? அது தெய்வ குற்றம் ஆகிவிடாதா..?

**- அடுத்த இதழில் பார்க்கலாம்.**



ஞானகுரு தரிசனம்

# பதவி எனும் பேராசை பாதை

கர்ப்பிணியாக இருக்கும் தன்னுடைய மகள் பிரசவ வேதனையை தாங்கவே மாட்டாள் என்று கதறிய தாயிடம், "அதுசரி, இந்த உலகத்தில் உங்கள் மகள் ஒருவர் மட்டும் தானே இப்படி கர்ப்பம் சுமந்து பிள்ளை பெறப் போகிறார்..'' என்று ஞானகுரு செய்த கிண்டலை கொஞ்சமும் கண்டுகொள்ளாமல் வழியும் கண்ணீருடன் பேசினாள் அருணா.

''ஒவ்வொரு பிரசவமும் பொண்ணுக்கு மறுபிறவி. குழந்தையை வயித்துல சுமந்திருந்து வெளியேத்துற வரைக்கும் அவ படுற வேதனை எந்த கடவுளுக்கும் புரியாது!" என்றாள்.

''வலி தாங்க மாட்டாங்கிறதால, சிசேரியன் செய்ய ஏற்கெனவே முடிவு செஞ்சுட்டோமே... பிறகு ஏம்மா பயப்படுறீங்க?" என்று மகன் ஆறுதல் சொன்னான்.

''சிசேரியன்னாலும் அதக்கடுத்து நாலு மாசம் வேதனையை தாங்கணுமே, அதுக்கும் அவ உடம்புல சக்தி இல்லையே" என்று அழுதாள்.

"கனிகளின் கனத்தைத் தாங்க முடியாமல் ஒடிந்துபோன செடி அல்லது மரத்தை எங்காவது பார்த்து இருக்கிறீர்களா...? பறவைகள் முட்டை இடுவதைப் போன்று, விலங்குகள் குட்டி போடுவது போன்று பெண்களும் சிறிய சிரமத்துடன் குழந்தை பெற்றுக் கொள்ளும்படியே அவர்களது உடல் அமைப்பு படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவள் மீது அன்பு கொண்டவர்கள் தான், பிரசவ வலி பற்றி பல்வேறு தவறான தகவல்களைப் பேசி பெண்ணை கலவரப்படுத்தி விடுகிறார்கள்.

பட்டாம்பூச்சி போன்று பறந்து திரிந்து வேலை செய்ய வேண்டிய கர்ப்பிணிகளை, கூட்டுப்புழுவைப் போன்று நெளிய வைத்து விடுகிறார்கள். பணம் கறக்கும் மருத்துவர்களும் அவர்கள் பங்குக்கு, கர்ப்பிணிகளை சோம்பேறிகளாக்கி பயத்தை விதைக்கிறார்கள். அதனால்தான் ஒவ்வொரு பெண்ணும் வயிற்றுக்குள் வெடிகுண்டு சுமப்பது போன்று அதிகபட்சம் பயந்து நடுங்குகிறாள்.

வெற்றி பற்றிய சந்தேகத்துடன் பந்தயத்தில் கலந்து கொண்டவன் ஜெயிக்கவே முடியாது. பிரசவத்தை மகா துன்பமாக, தாங்கமுடியாத வலியாக கற்பனை செய்து கொள்ளும் பெண்களுக்கும் வலியற்ற இயல்பான பிரசவம் சாத்தியமில்லாமல் போகிறது. வலியை விட அந்த வலி பற்றிய அச்சமே இத்தகைய துன்பத்திற்கு காரணமாகிறது..." என்றார் ஞனாகுரு

"இயற்கை பிரசவம் மட்டுமே நடந்த காலங்களில் நிறைய பெண்கள் இறந்து போயிருக்கிறார்கள் என்பதால் சிசேரியன் நல்ல முடிவு தானே......" மருமகள் விளக்கம் கேட்டாள்.

''அன்போடும், புரிதலோடும், காதலோடும் ஒரு வேலையைச் செய்யும் போது தேகம் எத்தனை சிரமம் அனுபவித்தாலும், அது வேதனையாகத் தோன்றாது. அப்படித்தான் பிரசவத்தையும் காதலுடன் எதிர்கொள்ள வேண்டும். அதற்கு முதல்கட்டமாக பிரசவ நேரம் வரை, செய்ய முடிந்த எல்லா வேலைகளையும் செய்து, உடம்பில் கொழுப்பு சேராமல் வைத்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகள் பள்ளியில் இருந்து வீட்டுக்கு வரும் நேரத்திற்காக ஆர்வமாக காத்திருக்கும் தாயைப் போன்று வயிற்றுக்குள் இருக்கும் தன்னுடைய இன்னொரு உயிர், வெளிவரும் நேரத்தையும் கர்ப்பிணி ஆர்வமுடன் எதிர்கொள்ள வேண்டும். ஆசை இருந்தால் பிரசவ

## மந்திரச்சொல்

எத்தனை பெரிய வீட்டையும் திறப்பதற்கு சின்னஞ் சிறிய சாவி போதும். அப்படியே எல்லா பெரிய பிரச்னைகளுக்கும் தீர்வு சின்னதாகவே இருக்கும்.

வலியையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் கிடைத்துவிடும். மருத்துவர்கள் மேற்பார்வையில் நடக்கும் சிசேரியன் பிரசவத்திலும் சில மரணம் நிகழ்வதைப் போன்று, இயற்கை பிரசவத்திலும் விதிவிலக்காக சில மரணங்கள் நேரலாம். விதிவிலக்குகள் எப்போதும் உதாரணங்கள் ஆகாது...”

“நீங்க சொன்னதை அப்படியே என் பொண்ணுகிட்டே சொல்றேன், அப்புறம்” என்று இழுத்தபடி கணவனைப் பார்த்தாள்.

“ம்.. உன் கணவருக்கு என்ன வேண்டும்?”

“என் வீட்டுக்காரர் இன்னும் பெரிய பதவிக்குப் போகணும், இந்த தமிழ்நாட்டுலேயே பெரிய அதிகாரியா இருந்து, எல்லோருக்கும் நல்லவரா இருக்கணும். தினமும் டி.வி.யில அவரைப் பத்தி பெருமையா காட்டணும்” என்று குழந்தை போன்று ஆசைப் பட்டாள்.

“அப்படியா…? உங்களுக்கு ஒரு அற்புதம் காட்டுகிறேன். ஒரே ஒரு கணம் எல்லோரும் கண்ணை மூடுங்கள்” என்றதும் எல்லோரும் ஆர்வமாக கண்களை மூடினார்கள்.

“நான் சொல்லும் வரை யாருமே கண்ணைத் திறக்காதீர்கள். இதோ... எபநேசருக்கு உயர் அதிகாரியிடமிருந்து ஒரு போன் வருகிறது. உயர் பதவிக்கான அரசு ஆணை வந்துவிட்டது என்கிறார். ஆம், இப்போது எபநேசர் தமிழகத்தின் தலைமை போலீஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டு பதவியும் ஏற்றுவிட்டார். அதை அனைத்து தொலைக்காட்சியிலும் நேரடி ஒளிபரப்பு செய்கிறார்கள். அந்த நிகழ்ச்சியில் முன் வரிசையில் அமர்ந்திருக்கும் அருணாதேவி ஆனந்தக் கண்ணீருடன் அந்த வைபவத்தைப் பார்க்கிறார்.

அதோ, எபநேசரின் உத்தரவுக்கு அனைத்து காவலர்களும் அடிபணிந்து நடக்கிறார்கள். அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் அவர் முன் ஏதாவதொரு வேண்டுகோளுடன் நிற்கிறார்கள். நினைத்த பதவியை பிடித்த திருப்தியில் எபநேசர் இருக்கிறார். அவரது சந்தோஷத்தில் குடும்பத்தினர் எல்லோரும் பங்கெடுத்து ஆனந்தமயமாக இருக்கிறீர்கள். சரி, இப்படியே சில மாதங்கள் ஆகிறது. இப்போது கண்ணைத் திறக்காமலே நான் கேட்கும் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள். அடுத்தகட்டமாக உங்களது அடுத்த ஆசை என்னவாக இருக்கும்?”

கொஞ்சநேரம் அந்த இடம் அமைதியாக இருந்தது.

“அடுத்ததா அவர் இந்திய அளவுல பெரிய ஆபிஸராப் போகணும்” என்றாள் அருணா.

> நோய் விரைவில் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை வரவேண்டும். நோயுடன் இருப்பது குறித்து கவலையோ, வெட்கமோ தேவையில்லை. இன்னும் செய்து முடிக்க பணிகள் ஏராளமாக காத்திருக்கிறது என்று நோயாளிகள் மனதார நம்ப வேண்டும். உங்கள் வீட்டுக்கு மட்டுமல்ல இந்த உலகிற்கே நீங்கள் ஒரு தவிர்க்கமுடியாத நபர் என்ற நினைப்புடன் நோயை எதிர்கொண்டால், நோய் விரைவில் தீர்ந்துவிடும்'' என்றதும் அருணாதேவி முகத்தில் சந்தோஷ ரேகை பரவியது.

‘‘ஆஹா... நன்றாகச் சொன்னீர்கள். இப்போது கனவு முடிந்தது, கண்களைத் திறங்கள்'' என்றதும் அனைவரும் கண் திறந்தார்கள்.

“நீங்கள் விரும்பிய பதவியில் கிடைத்த சந்தோஷம் சில நொடிகள் மட்டுமே நீடித்தது. அதற்குள் அடுத்த பதவிக்கு ஆசை வந்துவிட்டது அல்லவா? அந்த அகில இந்திய பதவி கிடைத்தால் மட்டும் நிரந்தர சந்தோஷத்துடன் இருக்கப் போகிறீர்களா? இல்லை, அதற்கும் அடுத்த பதவிக்காக ஏங்கி வருத்தப்படத்தான் போகிறீர்கள். நாளை கிடைக்க இருக்கும் ஒன்றில்தான் மகிழ்ச்சி இருக்கிறதென நினைத்தால், அந்த ‘நாளை’ கடைசிவரை உங்களுக்கு வரவே வராது.

மன்னர்கள் எல்லோருமே வாழ்நாள் முழுவதும் நிம்மதியாக இருந்ததே கிடையாது தெரியுமா? ஏனென்றால் எல்லா நாட்டையும் பிடித்தால்தான் சந்தோஷம் கிடைக்கும் என்று பேரரசர்கள் வாழ்நாள் முழுவதும் சண்டை போட்டுக் கொண்டே இருந்தார்கள். உலகையே தன் ராஜ்ஜியத்திற்குள் கொண்டுவர வேண்டும் என நினைத்த அலெக்ஸாண்டர் பெற்றதெல்லாம் வெற்றியல்ல, தோல்விதான். அதனால் இன்றைய நிஜத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடுங்கள். நாளைய பொழுதை விடிந்தபின்னர் பார்த்துக் கொள்ளலாம்'' என்றார் ஞானகுரு.

“ரொம்பவும் சரியா சொன்னீங்க சாமி. உண்மையில நான் இதுவரை இந்தப் பதவியை பெருசா எடுத்துக்காம, அடுத்த பதவி மீது மட்டுமே குறியாக இருந்தேன்... இப்போ என்னுடைய பதவியின் மதிப்பு புரியுது... ரொம்ப தேங்க்ஸ்” என்று எபநேசர் ஞானகுருவின் கையைப் பிடித்து ஆனந்தப்பட்டார்.

“எங்க குடும்பத்தை ஆசிர்வதிங்க சாமி..” என்று காலில் விழுந்த அருணாவின் தலையைத் தொட்டு ஞானகுரு ஆசிர்வதித்ததும், கொஞ்சம் தடுமாற்றத்துடன் லேசாக முகம் சுளித்து எழுந்தாள்.

அதை கவனித்த ஞானகுரு, “உன் மகள், கணவர் நலத்திற்காக பேசிய நீ, உன்னுடைய உடல் வலிக்கு ஏன் நிவாரணம் கேட்கவில்லை?” என்றதும் குடும்பத்தினர் ஆச்சர்யப்பட்டார்கள்.

‘‘ரொம்ப நாளாவே அவங்களுக்கு முதுகுவலி இருக்குது, டாக்டர்கிட்ட காட்டியும் சரியாக மாட்டேங்குது, நீங்க சொல்லாமலே கண்டுபிடிச்சிட்டீங்களே சாமி'' என்று மருமகள் ஆச்சரியப் பட்டாள்.

“ஆமா சாமி, முதுகுவலி மட்டுமில்ல, அவ்வப்போ வயிறு வலியும் வந்திடுது. என் கண் முன்னாலேயே என் பொண்ணு நல்லா இருக்கிறதை பார்த்துட்டா போதும், சந்தோஷமா செத்துப்போவேன்” என்றாள்.

‘‘வலியில் துடிப்பவர்களுக்கு எந்த மந்திரமும், ஆசிர்வாதமும் உபயோகப்படாது.







www.gyaanaguru.com

## பதவி எனும் பேராசை பாதை

அவர்களுக்குத் தேவை நம்பிக்கை மட்டும்தான்”


“நம்பிக்கை என்றால்...”

“இந்த நோய் விரைவில் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை வரவேண்டும். நோயுடன் இருப்பது குறித்து கவலையோ, வெட்கமோ தேவையில்லை. இன்னும் செய்து முடிக்க பணிகள் ஏராளமாக காத்திருக்கிறது என்று நோயாளிகள் மனதார நம்ப வேண்டும். உங்கள் வீட்டுக்கு மட்டுமல்ல இந்த உலகிற்கே நீங்கள் ஒரு தவிர்க்கமுடியாத நபர் என்ற நினைப்புடன் நோயை எதிர்கொண்டால், நோய் விரைவில் தீர்ந்துவிடும்” என்றதும் அருணாதேவி முகத்தில் சந்தோஷ ரேகை பரவியது.

“தினமும் மந்திரம் போன்று, ‘என் நோய் தீர்ந்துவிடும், நான் இந்த வீட்டுக்கு முக்கியமான நபர், நான் மிக நம்பிகையுடன் இருக்கிறேன்’ என்று சொல்லிக் கொண்டே இரு.. உன் கண் முன்னாலே நோய் தீர்ந்துவிடும்” என்ற ஞானகுருவிடம், தன்னுடைய நண்பரை அறிமுகம் செய்துவைத்தார் எபநேசரின் மகன்.

“சாமி, இவன் என்னோட நண்பன் ராகவன். என்னோட சேர்ந்து பிசினஸ் பண்றார். ரொம்பவும் நல்லவர் ஆனா, கடவுள் நம்பிக்கை இல்லாதவர். இவரை கொஞ்சம் திருத்துங்களேன்...” என்றார்.

“கடவுளைக் கும்பிட உங்களுக்கு எத்தனை உரிமை இருக்கிறதோ, அத்தனை உரிமை அவர்களுக்கு மறுக்கவும் இருக்கிறது. இந்த உலகில் முழுமையான ஆத்திகர், முழுமையான நாத்திகர் என்று எவருமே கிடையாது. கடவுள் நம்பிக்கையில் ஆழமாக இருப்பவர்களுக்கு ஏமாற்றம், தோல்வி கிடைக்கும்போது, ‘உண்மையில் கடவுள் இருக்கிறாரா?’ என்று மனதின் ஓரத்தில் விசனப்படுவதுண்டு. நாத்திகர்களும் சோதனை ஏற்படும்போது, கடவுள் லீலையோ என்று பயப்படுவதுண்டு. இருவரும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதால் எவரையும் திருத்தவேண்டிய அவசியமும் இல்லை” என்றேன்.



நாத்திகன் என்றதும் ஞானகுரு ஆவேசமடைவார் என்று எதிர்பார்த்த ராகவன் ஏமாற்றமடைந்தான்.

“கடவுள் இல்லை என்பதுதானே அறிவியல்!” எனக் கேட்டான் ராகவன்.

“அது தான் உனக்கு சந்தோஷம் தருகிறது என்றால் அப்படியே வைத்துக் கொள். இந்த பூமியை சூரியன் சுற்றிவருகிறது என்று அந்தக் காலத்து விஞ்ஞானிகள் சொன்னார்கள். அதன்பிறகு பூமியே சூரியனைச் சுற்றுகிறது என்றார்கள். உடனே நம்புகிறோம். இந்த அறிவியல் கண்டுபிடிப்பையும் முழு உண்மையென்று சொல்ல முடியாது. ஒரு வேளை இந்த பிரபஞ்சம் முழுவதுமே, வேறு ஏதாவது ஒரு பிரபஞ்சத்தைச் சுற்றிக்கொண்டு இருப்பதாக இன்னும் பல்லாயிரம் வருடங்கள் கழித்து யாரேனும் கண்டுபிடிக்கலாம். ஏன், நாம் எல்லாமே கனவில் வாழ்வதாகவும் இருக்கலாம். எந்த ஓர் அறிவியலும் நிலையானது அல்ல, நாளுக்கு நாள் மாற்றம் அடையக் கூடியது...”

“அதெப்படி சாமி... கடவுள் பூமியை படைச்சதா சொல்றீங்க. ஏதாவது ஒன்று இருந்தால்தானே அதில் இருந்து இன்னொன்று படைக்க முடியும். இந்த பூமியை இறைவன் படைச்சாருன்னா, ஏற்கெனவே இந்த பூமியும் கிரகங்களும் வேறு ஏதாவது ஒரு வடிவத்தில் இருந்திருக்க வேண்டுமே...” என்று கேட்டான்.

“ஒரு தவளையின் மூளைக்கு கிணறுதான் சமுத்திரம். அதைவிட பெரியதாக கற்பனை செய்ய அதற்குத் தெரியாது, முடியாது. அப்படித்தான் மனிதர்களின் மூளைகளுக்கு கட்டுப்படாததும், எட்ட முடியாததும் எத்தனையோ இருக்கிறது. உன் வீட்டில் இருக்கும் பல்லியால் உன் வாழ்க்கை முறையை புரிந்து கொள்ள முடியுமா? அதுபோல இந்த பிரபஞ்சத்தையும் கடவுளையும் முழுமையாக அறிந்துகொள்ளும் அளவுக்கு மனித மூளை இன்னமும் விசாலமடையவில்லை. அதனால் உன்னுடைய மூளைக்கு எது சரியெனப் படுகிறதோ அந்த பாதையில் தொடர்ந்து செல்” என்று பேச்சை முடித்துக் கொண்டார் ஞானகுரு. எபநேசரின் மகன் பர்ஸில் இருந்து பணத்தை எடுத்து ஞானகுரு கையில் திணித்தபடி ஒரு கேள்வி கேட்டான்.

“சாமி... நானும் காதல் திருமணம்தான். ஆனா... எங்களுக்குள்ள இப்போ அடிக்கடி சண்டை வருது. ஆனா நான் அவளை நேசிக்கிறேன், அவளும் என்னை நேசிக்கிறா...” என்றான். அவன் சொல்வது உண்மை என்பதுபோலவே அவனது மனைவியும் அருகே வந்து நின்றாள்.

“இந்த உலகிலேயே ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் என்றால், காதலில் விழுந்தவர்கள் மட்டும் தான். ஏனென்றால் காதலி தலையில் வைத்திருந்த காய்ந்து போன பூ, ஒரு காதலனுக்கு ஆயிரமாயிரம் சந்தோஷம் தரும். காதலன் தனக்காக முன்கூட்டியே காத்திருப்பதைப் பார்த்தாலே காதலிக்கு ஆனந்தக் கண்ணீர் முட்டிக் கொள்ளும். இத்தனை ஆழமாக காதலித்து அவர்கள் திருமணம் செய்துகொள் கிறார்கள் என்றால், அது உலகை ஜெயித்த மனிதனின் சாதனையைப் போன்றது. திருமணம் முடித்துக்கொண்ட காதலர்கள் அத்தனை சந்தோஷமாக இருப்பதில்லை. ஏனென்றால் காதலில் கிடைத்தது போன்ற அதே அளவு மகிழ்ச்சியை திருமணத்திற்குப் பின்னரும் எதிர்பார்க்கிறார்கள், அது கிடைக்காத போது ஏமாற்றமும் துன்பம் வருகிறது.

திருமணம் என்பது காதலின் ஒரு பகுதியே தவிர, அது காதலின் வெற்றி அல்ல. அந்த உண்மை தெரியாமல் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்துகிறார்கள். திருமணத்துக்குப் பிறகு இருவருக்கும் பொறுப்பும், கடமையும் அதிகரிக்கும் என்பதை உணர்ந்தாலே போதும். மேலும், ஒருவருக்கொருவர் கொஞ்சம் இடைவெளி கொடுக்கும் பக்குவம் இருக்க வேண்டும். அந்த இடைவெளியே நிம்மதியும் மகிழ்ச்சியும் தரும், காதலும் நீடுழி வாழும்...” என்று ஞானகுரு முடிக்கும் முன்னரே மரத்தின் பின்பக்கம் அசைவு தென்பட்டது.

அங்கே நொண்டிச் சாமியார் நின்றுகொண்டிருந்தார்.

**- வருவார் ஞானகுரு**




Gyanaguru Publication

Digital Monthly Magazines

Advertisement Rate card for 2024



Full page - Rs.5,000

Half page - Rs.3,000

Centrespread / Doublespread - Rs.10,000

- Each book is distributed directly to a mobile audience comprising 750+ WhatsApp groups and reaches a vast viewership of 1,00,000+ individuals, including Magzter and Pustaka.
- Advertorial matter for 4 pages Rs.10,000/-
- A singular advertisement will be published within the pages of our other Magazines.
- Size : formal A4 book size
- GST 18%

Gyanaguru Publication

G2 Govind Apartment, 6 ,AGS Colony 4th cross street, Kottivakkam, Chennai – 600041.
Ph: 9840903586, 8072589355 Website : Gyaanaguru.com E.Mail : Gyanagurupublication@gmail.com

# மனித அவதாரங்கள்

கடவுள் அவதாரம் குறித்து சிலாகிக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். உண்மையில் கடவுளைவிட மனிதர்களே அதிக அவதாரம் எடுக்கிறார்கள்.

ஆம், மனிதர்கள் ஒவ்வொரு நேரமும் தங்களை எப்படியெல்லாம் மாற்றிக்கொள்கிறார்கள், மாற்றிக் கொள்ள விரும்புகிறார்கள் என்று கவனித்தால் ஆச்சர்யமாக இருக்கும்.

மேலதிகாரியைப் பார்த்தவுடன் நாயைப் போன்று வாலாட்டும் மனிதர்கள் அடிமட்ட ஊழியர்களிடம் பாம்பு போல் சீறுகிறார்கள். தன்னுடைய பிள்ளையை நேசிக்கும் ஒரு மனிதர், வேறு ஒரு பிள்ளையை இடித்து கீழே தள்ளிவிட்டு திரும்பிப் பார்க்காமல் போக முடிகிறது. காலத்துக்கும் இடத்துக்கும் ஆட்களுக்கும் ஏற்ப தங்கள் குணத்தை, முகத்தை மனிதர்கள் மாற்றிக்கொள்வது எத்தனை விசித்திரம்..?

இன்னொரு விஷயம் தெரியுமா..?

எந்தவொரு மனிதரும் தங்களுடைய வாழ்க்கையில் மட்டுமின்றி உருவத்திலும் முழு திருப்தி அடைவதில்லை. எத்தனை பெரிய அழகியாக இருந்தாலும், மிஸ்டர் ஹேண்ட்சம் என்று பாராட்டப்படும் ஆணாக இருந்தாலும், அவர்களுக்கும் சில குறைகளும் ஆற்றாமையும் இருக்கவே செய்கிறது.

’உங்கள் உடலில் ஏதேனும் ஒரு மாற்றம் செய்து கொள்ளலாம் என்றால், என்ன செய்வதற்கு ஆசைப்படு வீர்கள்?’ என்று நூற்றுக்கணக்கான மனிதர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு ஒவ்வொரு நபரும் விதவிதமாக பதில் சொன்னார்கள்.

‘’எனக்கு இரண்டு கன்னத்திலும் குழி விழ வேண்டும்”

“இன்னும் மூன்று சென்டிமீட்டர் உயரமாக மாற வேண்டும்…”

“என்னுடைய நிறம் இன்னமும் வெள்ளையாக வேண்டும்…”

“தொப்பை இல்லாத உடல் வேண்டும்…”

‘’என்னுடைய பல்வரிசை சீராக மாற விரும்புகிறேன்..” என்று விதவிதமாக சொன்னவர்களே அதிகம். ‘இப்போது இருக்கும் உடலே போதும்’ என்று யாரும் சொல்லவே இல்லை.

இதே கேள்வி சின்னஞ்சிறிய பள்ளிக் குழந்தைகளிடம் கேட்கப்பட்டது. அவர்கள் சொன்ன பதில் என்ன தெரியுமா..?

“பறவைக்கு மாதிரி எனக்கு இறக்கை முளைக்க வேண்டும்…”

“அணில் மாதிரி மரத்துக்கு மரம் தாவும் வகையில் எனக்கு கால்கள் வேண்டும்…”

“மீன் மாதிரி தண்ணீருக்குள் நான் ஜாலியாக நீண்ட நேரம் இருக்கவேண்டும்…” என்பது போன்று கனவுகளை சொன்னார்கள்.


குழந்தையாக இருக்கும்போது மிகச்சரியாக சிந்தித்த நபர்கள், வளர்ந்தபிறகு ஏன் மாறிவிடு கிறார்கள்..? அக்கம்பக்கத்து நபர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்த்தே மாற்றத்துக்கு ஆசைப்படு கிறார்கள்.

காலம், சூழலுக்கு ஏற்ப அவதாரம் எடுத்து தங்களைத்தாங்களே தாழ்த்திக் கொள்கிறார்கள்.


குழந்தையாக மாறுங்கள், அதுவே மகிழ்ச்சி.

## மந்திரச்சொல்

வாழ்க்கை மனிதருக்கு வைக்கும் கடினமான பரீட்சை எதுவென்றால், சரியான நேரம் வரும் வரையிலும் காத்திருக்கச் செய்வது தான்.




www.gyaanaguru.com



**?டைனோசரஸ் போன்று மனிதகுலமும் ஒரு நாள் ஒட்டுமொத்தமாக அழிந்துவிடுமா..?**

**ஜெசிமா, மதுரை**

**ஞானகுரு :**

ஒரே ஒரு பூகம்பம் ஒட்டுமொத்த உலகத்தையும் உலுக்கிப் போடலாம். ஒரு எரிமலை வெடிப்பினால் ஏற்படும் புகை மண்டலம் நீண்டகாலம், சூரிய ஒளியை முழுமையாக மறைத்து மனிதகுலத்தை அழித்துவிடலாம். ஆனால், இதற்கான சாத்தியங்கள் ரொம்பவே குறைவு. ஏனென்றால், மற்ற எந்த மிருகங்களும் பேரழிவுகளை எதிர்பார்த்து, அவற்றை தவிர்ப்பதற்கும் தடுப்பதற்கும் முயல்வதில்லை. ஆனால், மனிதன் புத்திக்கூர்மையுடன் சிந்திக்கிறான். தனிப்பட்ட மனிதனாக இல்லாமல், உலகெங்குள்ள மனிதர்களின் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி கொஞ்சம் கொஞ்சமாக ஆபத்துகளிடம் தப்பிக்கும் வழிகளை ஆய்வு செய்கிறான். இந்த கூட்டு முயற்சி வேறு எந்த உயிரினங்களிடமும் இல்லை. ஆகவே, எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும் மனிதகுலம் முழுமையாக அழிந்துபோவதற்கான வாய்ப்பு குறைவுதான். அதேநேரம், இயற்கை எனும் பிரமாண்டத்தின் முன் மனிதனின் முயற்சிகளும் கண்டுபிடிப்புகளும் தூசு என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.


# ஞானகுரு பதில்கள்

**?பாராட்டுகளுக்கு மனம் ஏங்கித் தவிப்பதேன்..?**

**வி.ஹரிணி, விழுப்புரம்.**

**ஞானகுரு :**

தன்னுடைய வேலையை கடமையாகச் செய்பவர் பாராட்டுக்கு ஏங்குவதில்லை. மற்றவர்களைவிட சிறப்பாக பணியாற்றுவதாக ஒப்பிட்டுப் பார்ப்பவரே பாராட்டுக்கு ஏங்குகிறார். பாராட்டும் பதவியும் தேடி வருவதுதான் சிறப்பு என்ற உண்மையை அறிந்தவர் இதற்காக ஒருபோதும் தவிக்க மாட்டார்.





**?மாரடைப்பால் மரணம் அடைவது அறியாமையா... ?**

**என்.முகுந்தராஜன், சூளூர்.**

**ஞானகுரு :**

மருந்தாக உணவு எடுத்துக்கொண்டாலும், போதிய உடற்பயிற்சிகள் செய்தாலும் நோயினால் மனிதர்கள் தாக்கப்படுவதும், மரணம் அடைவதும் நடந்துகொண்டே தான் இருக்கும். முன்பு காரணம் தெரியாத மரணங்களை எல்லாம் பேய் அடித்தது, செய்வினை என்று சொல்லிவிடுவார்கள். இப்போது மருத்துவக் காரணம் தெரிவதால் மாரடைப்பு என்கிறார்கள். இரவில் தூங்கும் நேரம் குறைவதும், சீரற்ற உணவு பழக்கமும் மாரடைப்பு ஏற்படுவதற்கான பல்வேறு காரணிகளில், முக்கியமானவை.







**?இழப்புகள் மனிதனை பக்குவப்படுத்துமா..?**

**என்.மாரிமுத்து, லட்சுமணபுரம்.**

**ஞானகுரு :**

ஏதேனும் ஒன்றை இழக்கும் நேரத்தில்தான், அதனுடைய அருமையை மனிதர்கள் அறிகிறார்கள். கழற்றிவைத்த மோதிரத்தைக் காணவில்லை என்றால், அது யார் வாங்கிக்கொடுத்தது தெரியுமா..? எத்தனை சிறப்பான மாடல் தெரியுமா..? எத்தனை மதிப்பு தெரியுமா..? என்றெல்லாம் புலம்புவார்கள். ஆனால், எல்லாம் கொஞ்ச காலம்தான். அதேபோன்று இன்னும் எத்தனை மதிப்புள்ள பொருட்கள் தங்களிடம் இருக்கிறது என்று யோசித்துக்கூட பார்க்க மாட்டார்கள். புதிதாக ஒரு நல்ல மோதிரம் வாங்கிவிட்டால், பழைய மோதிரத்தை மறந்தே போவார்கள். இதுதான் மனிதனின் குணம். குறிப்பிட்ட காலத்திற்குப் பின் பெற்றோர் இறப்பையே பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. எனவே, இழப்புகளில் இருந்து பக்குவம் பெறும் மனப்பான்மை மனிதர்களுக்கு இல்லை என்பதே உண்மை.

**?என் பையனின் நடவடிக்கையைப் பார்த்தால் அவன் எதிர்காலம் பாழாகிவிடுமோ என்று அச்சமாக இருக்கிறது. என்ன செய்வது..?**

**டி.வாணிச்சந்திரன், எண்ணூர்.**

**ஞானகுரு :**

இந்த எதிர்மறை எண்ணமே பிள்ளையின் வாழ்க்கையை சிதைத்துவிடலாம். சிக்கலான மனநிலையில் இருந்து பிள்ளை மீண்டுவிடுவான் என்று நம்பிக்கை வையுங்கள். ‘நீ மிகவும் நல்ல பிள்ளை, ஏன் இப்படிப்பட்ட தவறுகள் உன் வாழ்வில் நடக்க வேண்டும்... நீ நல்ல வண்ணம் வாழலாம்..’ என்று நம்பிக்கை ஒளியூட்டுங்கள். அதேநேரம் மீண்டும் மீண்டும் பிள்ளை தவறு செய்யும்போது மிக உறுதியுடன் தண்டிக்கவும் கண்டிக்கவும் செய்யுங்கள். சொன்ன பேச்சு கேட்பதில்லை என்று பிள்ளையை தள்ளிவைத்தால், நாளை நீதிமன்றமும் காவல் துறையும் தண்டிக்கும் நிலை ஏற்பட்டுவிடும்.



**?நாட்டில் வலிமையாக இருக்கவேண்டியது காவல் துறையா.... நீதித்துறையா... ராணுவத்துறையா..?**

**பி.பெருமாள்சாமி, திருநெல்வேலி.**

**ஞானகுரு :**

ராணுவம் வலிமையாக இருக்கும் நாடுகளில் சர்வாதிகார ஆட்சியே நடக்கும். காவல் துறை வலிமையாக இருந்தால் அராஜகவாதிகளுக்கு கொண்டாட்டம் ஆகிவிடும். நீதித்துறை வலிமையாக இருப்பதே ஓரளவுக்கு நல்லது. இவை எல்லாவற்றையும்விட, மக்கள் மன்றமான சட்டமன்றமும் நாடாளுமன்றமும் வலிமையாக இருப்பதே சிறப்பு.



ஞானகுரு
# மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ் 3 - 2

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** gyaanaguru.com

www.gyaanaguru.com

**?** இல்லற வாழ்வுக்கு பலம், பலவீனம் தருவது எது..?

சி.சிந்தாமணி, ராஜாக்கமங்கலம்.

**ஞானகுரு :**

கணவன், மனைவிக்கு இடையிலான நம்பிக்கையே இல்லற வாழ்வுக்கு பலம் தருகிறது. இந்த உறவுக்கு நடுவில் மூன்றாவது நபர் நுழையும்போது, இல்லற வாழ்வின் அஸ்திவாரம் ஆட்டம் காண்கிறது. அந்த மூன்றாவது நபர் பெரும்பாலும் கணவன், மனைவியின் பெற்றோராக இருப்பதுவே பெரும் துயரம்.





**?** குறுக்குவழியில் பணம் சேர்ப்பது வாழ்வை வளமாக்குமா..?

கே.மகாலட்சுமி, அறந்தாங்கி.

**ஞானகுரு :**

நேர்வழி, குறுக்குவழி என்பதெல்லாம் ஆளுக்கு ஆள், நாட்டுக்கு நாடு மாறுபடக்கூடியது. நம் இந்தியாவில் வங்கியை ஒரு சாதாரண மனிதனால் ஏமாற்ற இயலாது. பணம் கட்டவில்லை என்றால் அவன் சொத்துக்களை ஜப்தி செய்து ஜெயிலில் போட்டுவிடுவார்கள். ஆனால், பெரும் கோடீஸ்வரர்கள் வங்கிக்கு பணம் கட்டாமல் ஏமாற்றலாம். அவர்கள் குறுக்குவழியில் பணம் சேர்ப்பது தெரிந்தாலும், அரசு கண்டுகொள்வதில்லை. அவர்கள் நிறுவனம் பணம் கட்டவில்லை என்றால் பணத்தை தள்ளுபடி செய்வதும் உண்டு. அப்படித்தான் சாராயத்தை தனி நபர்கள் விற்பதை தவறு என்று சொல்லும் அரசு, அந்த தொழிலை பட்டப்பகலில் விளம்பரம் போட்டு செய்கிறது. ஆகவே, சரி, தவறு என்று பார்க்காமல் நிம்மதி தரும் வழியில் பணத்தைத் தேடுங்கள். அது எந்த வழியாக இருந்தாலும் நல்லதே. அதேநேரம், பணம் இருந்தால்தான் வாழ்வு வளமாகும் என்ற எண்ணமே தவறு. பணம் கொஞ்சமாக இருந்தாலும் வாழ்வை கொண்டாட்டமாக வாழ முடியும்.



# கவித்துவம்



என்ன பெரிய தொலைவு...
கண்களை மூடிக்கொண்டால்
உன் அறையிலிருப்பேன்
நான்..!!

- பிரிம்யா கிராஸ்வின்

www.gyaanaguru.com

# வார்த்தைகளே வரம்

இன்னொருவருக்குப் புரிந்தால் தான் ஒரு மொழியினால் பிரயோசனம் உண்டு. புரியாவிட்டால் அதைத் தெரிந்திருப்பதும் ஒன்றுதான். தெரியாமலிருப்பதும் ஒன்றுதான். - **அ.முத்துலிங்கம்**

யாரையும் முழுவதுமாக நல்லவன் என்றோ, தீயவன் என்றோ வகைப்படுத்திவிட முடியாது. சூழலுக்கேற்ப மாறிக்கொண்டே இருக்கிறார்கள். - **வெ.இறையன்பு**

வெற்றி என்பது முடிவு அல்ல, தோல்வி என்பது விதியும் அல்ல. நகர்ந்துகொண்டே இருப்பதே வாழ்வு - **வின்சன்ட் சர்ச்சில்**

மன்னிப்பதன் காரணமாக நடந்தது எதையும் மாற்றிவிட முடியாது. ஆனால், எதிர்காலத்தில் நிச்சயம் மாற்றம் இருக்கும். - **பெர்னார்ட் மெல்ட்ஸர்**

சில அழகான பாதைகளை தொலைந்துபோகாமல் கண்டுபிடிக்க முடியாது - **எரோல் ஓசன்**


ஒரு செடி நடுவது என்பது நாளை என்பதன் மகத்தான நம்பிக்கை - **ஆட்ரி ஹெப்பர்ன்.**

விரும்புவது கிடைப்பது வெற்றி... கிடைப்பதை விரும்புவது மகிழ்ச்சி. - **எஸ்ட் லௌடர்**

தீபங்களுக்கு எரிவதைத் தவிர எந்தப் பிரார்த்தனைகளும் இல்லை.. - **பழநிபாரதி**



www.gyaanaguru.com














































































## 25 புத்தகங்கள் 500 ரூபாய்...

ஞானகுரு வழங்கும் மகிழ்ச்சி தமிழ் மாத இதழ் மற்றும் ஹேப்பினஸ் ஆங்கில மாத இதழ்களின் அத்தனை பிரதிகளும் வேண்டுமா..? கீழ்க்கண்ட எண்ணுக்கு ஜிபே மூலம் 500 ரூபாயுடன் உங்களுடைய மெயில் ஐடி அனுப்பிவையுங்கள். அத்தனை மின் இதழ்களும் அனுப்பிவைக்கப்படும்.

**GPAY : +91 72997 53999**

www.gyaanaguru.com

www.gyaanaguru.com








# டீன் வயதினருக்கு பணமே எதிரி!

டீன் ஏஜ் வயதினர் இருக்கும் வீடுகள் எல்லாமே போர்க்களமாகவே காட்சியளிக்கின்றன. எங்கள் ஆசையை பெற்றோர் புரிந்துகொள்வதில்லை என்று பிள்ளைகளும், எங்கள் பாசத்தை பிள்ளைகள் உணர்வதேயில்லை என்று பெற்றோரும் தன்னிலை விளக்கம் தருகிறார்கள். உள்ளே புகுந்து பார்த்தால் இரண்டு பக்கமும் நியாயம் இருக்கும்.

இதற்கு ஞானகுரு என்ன தீர்வு வைத்திருக்கிறார்..? இதோ அவரே பேசுகிறார்.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான புரிதல் என்பது பிரச்னையே இல்லை, பெரும்பாலான வீடுகளில் பணமே பிரதான பிரச்னையாக இருக்கிறது.

”பணக்கார வீடுகளில் அதிக பணம் கொடுப்பது பிள்ளைகளுக்கு பிரச்னையாகிறது. நடுத்தர மற்றும் கீழ்த்தட்டு மக்களின் வீடுகளில் பணம் கொடுக்க முடியாதது பிரச்னையாகிறது.

டீன் ஏஜ் ஆண் பிள்ளைகள் என்றால் ஒரு ஹைடெக் டூவீலர், நியூ மாடல் செல்போன், ஹோட்டல்களில் சாப்பிடுவதற்கு பணம் போன்றவை அத்தியாவசியமே என்று நினைக்கிறார்கள். ஏனென்றால், ஒருசிலர் அப்படி வைத்திருக்கும்போது, தங்களிடம் அது இல்லை என்பது அவமானமாகத் தெரிகிறது.

இதுவே டீஜ் ஏஜ் பெண் பிள்ளைகளுக்கு பிராண்டட் அழகு சாதனப் பொருட்கள், தனி அறை, ஃபேன்ஸி ஆடைகள், தோழிகளுடன் அவுட்டிங், பார்ட்டி போன்றவை அத்தியாவசியமாகத் தெரிகிறது. பியூட்டி பார்லருக்கு போய் செலவழிக்கும் பிள்ளைகளைப் பார்க்கும்போது, தாங்கள் மட்டும் எல்லா வகையிலும் மிகவும் பின்தங்கியிருப்பதாக நினைக்கிறார்கள்.

இந்த காலத்தில் வெளியாகும் விளம்பரங்கள் எல்லாமே டீன் ஏஜ் பிள்ளைகளைக் கவர்ந்து இழுப்பதற்காகவே எடுக்கப்படுகின்றன. இந்த டியோடரண்ட் உபயோகித்தால், இந்த ஷூ வாங்கினால், இந்த வண்டி வாங்கினால், இந்த இன்னர் உடைகள் வாங்கினால் உங்கள் பின்னே ஆணும், பெண்ணும் ஓடி வருவார்கள் என்று ஆசை காட்டுகிறார்கள். இப்படிப்பட்ட விளம்பரங்கள் மீது டீன் ஏஜ் வயதினருக்கு பேரார்வம் வருகிறது. எல்லாவற்றையும் வாங்க விரும்புகிறார்கள்.

இந்த விஷயங்களுக்கு எல்லாம் பணம் செலவழிக்க முடியாத அல்லது விரும்பாத பெற்றோர் மீது கோபம் கொள்கிறார்கள். இந்த கோபத்தை நேரடியாக காட்ட முடியாமல் பேசும் போதெல்லாம் எரிந்துவிழுகிறார்கள், சண்டை போடுகிறார்கள். எனவே, இந்த பிரச்னையை சரிசெய்ய வேண்டும் என்றால், டீன் ஏஜ் பிள்ளைகளுக்கு பணம் பற்றிய புரிதல் வேண்டும்.

இன்றைய பெற்றோருக்கே பணம் பற்றிய புரிதல் பிரதானமாக இல்லை என்பதே உண்மை. வேலை செய்தால் பணம் வருகிறது என்பது மட்டும் தெரியுமே தவிர, பணத்தின் உண்மையான மதிப்பும் அதன் தன்மையும் புரியவில்லை. ஆகவே, ஆறாம் வகுப்பில் இருந்து பணத்தின் மதிப்பு

குறித்து பிள்ளைகளுக்கு சொல்லித்தர வேண்டும்...” என்கிறார் ஞானகுரு.

பணம் பற்றி சொல்லித்தருவதற்கு என்ன இருக்கிறது..? பணம் சேமிப்பின் அவசியம் குறித்து பாடம் மூலம் சொல்லித்தருகிறார்களே..?

”பணம் பற்றி தெரிந்துகொள்ளாமல், பணத்தின் வலிமை புரியாத ஒருவருக்கு சேமிப்பின் மகத்துவம் தெரியாது. எனவே ஒவ்வொரு நபருக்கும் ஒவ்வொரு காலத்திலும் எவ்வளவு பணம் தேவை என்பதை முதலில் புரிய வைக்க வேண்டும்.

அதாவது, பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உணவு, உடை, கல்லூரிக் கட்டணம் தவிர்த்து வேறு விஷயங்களுக்கு பெற்றோரிடமிருந்து பணம் எதிர்பார்ப்பது முட்டாள்தனம் என்பதை புரிய வைக்க வேண்டும். ஆடம்பரச் செலவுகளுக்கு பணம் செலவழிக்க வேண்டும் என்றால், அதற்கான பணத்தை அவர்களே சம்பாதித்துக்கொள்ள வேண்டும் என்று வழி காட்ட வேண்டும்.

இந்த விஷயத்தில் பெற்றோர்களும் உறுதியாக இருக்க வேண்டியது அவசியம். தாங்கள் சம்பாதித்த பணத்தை எல்லாம் பிள்ளைகளுக்குத்தானே கொடுக்கப் போகிறோம், அவர்களுக்காகத்தானே சம்பாதிக்கிறோம் என்ற எண்ணமே நிறைய பெற்றோர்களிடம் மேலோங்கியிருக்கிறது. அதனால் தான், புதிய மொபைல் வாங்க ஆசைப்பட்டால், புதிய வாகனத்துக்கு ஆசைப்பட்டால், டூர் போக விரும்பினால் உடனடியாக ஆசையை நிறைவேற்றிக் கொடுக்கிறார்கள்.

இது பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்றும் செயல் அல்ல, அந்த பிள்ளையின் தலையில் மண்ணள்ளிப் போடுவதற்கு சமம். பணம் எப்படி வருகிறது, அதை சம்பாதிக்க எத்தனை சிரமப்பட வேண்டும் என்பதெல்லாம் புரியாமல் பிள்ளைகள் வளர்ந்துவிடுகிறார்கள். இவர்களுக்கு பணம் எப்போதும் கிடைத்துக்கொண்டே இருக்கும் என்று நினைக்கிறார்கள். அதனால்தான், நிறைய சொத்து சேர்த்து வைத்திருக்கும் வீடுகளில் எல்லாம் அந்த சொத்தை பிரிக்கவும், அனுபவிக்கவும் எக்கச்சக்க சண்டை நடக்கிறது. பெரும்பாலான சொத்துக்கள் யாரும் அனுபவிக்க முடியாமல் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது.

ஒரு மாணவன் ஆடம்பரமான உயர் விலையுள்ள பைக் வாங்கி பள்ளிக்கு அல்லது கல்லூரிக்குக் கொண்டுவந்தால், அந்த ஆசை மற்ற மாணவர்களுக்கும் தொற்றிக்கொள்ளும். அவர்களும் வீட்டில் அடம் பிடித்து அப்படியொரு பைக் வாங்க விரும்புகிறார்கள். வசதியான வீடுகளில் இது உடனடியாக நடந்துவிடுகிறது.

நடுத்தர வர்க்கத்து வீடுகளில் ஒரு கட்டத்திற்கு மேல் பிள்ளைகளின் கோபத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் கடன் வாங்கி வண்டி வாங்கிக் கொடுத்து சுமையை கூட்டிக் கொள்கிறார்கள்.

ஏழைகள் வீட்டில் அதற்கும் வழியிருக்காது. எப்படியும் வண்டி வாங்க வேண்டும் என்ற ஆர்வத்தில் தவறான வழிகளில் பிள்ளைகள் நகர்கிறார்கள். ஆன்லைன் ரம்மி, கஞ்சா கடத்தல், திருடுதல், சூதாடுதல் போன்றவை அவர்களுக்கு எளிதான வழியாகத் தெரிகிறது. இந்த பாதை ஒரு வழிப் பயணம் என்பது அவர்களுக்குப் புரிவதில்லை.

பணம் பற்றிய புரிதல் இல்லாத காரணங்களால் தான், நடுத்தர வர்க்கத்தினரும், ஏழைகளும் அடுத்த கட்டத்துக்கு வர முடியாமல் தடுமாறுகிறார்கள். பணக்காரப் பிள்ளைகள் நஷ்டமடைந்தாலும், அதிலிருந்து மீண்டு விடுகிறார்கள், சிலர் ஒட்டுமொத்தமாக தொலைத்தும் விடுகிறார்கள்.

எனவே, வேலைக்குச் சென்று பணம் சம்பாதித்த பிறகே ஆடம்பரச் செலவுகள் செய்வதே சரி என்பது பொதுப்புத்திக்கு உரைக்கும் வகையில் மாணவர்களுக்கு சொல்லித்தர வேண்டும். அப்பா காசில் ஆடம்பரச் செலவு செய்பவனை ஊதாரி என்றும், முட்டாள் என்றும் அடையாளம் காட்ட வேண்டும்.

பணம் எப்படி உருவாகிறது, பணத்தை எப்படியெல்லாம் அடைய முடியும், அதனை எப்படியெல்லாம் சேமிக்கலாம், பணத்தின் வெவ்வேறு வடிவங்கள் என்ன, நீண்ட கால கடன்கள் வாங்குவது நல்லதா, அடமானக் கடன்களில் இருக்கும் சிக்கல், கல்விக் கடன், கிரிடிட் கார்டு என ஒவ்வொன்று குறித்தும் கொஞ்சம் கொஞ்சமாக பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். அப்போது தான், பணம் பற்றிய புரிதல் உள்ள ஒரு புதிய தலைமுறை உண்டாகும்.

ஹோட்டலில் டேபிள் துடைக்கும் மனிதருக்கும் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவரும் பணமே சம்பாதிக்கிறார், இருவருக்கும் ஒரே மரியாதை தர வேண்டும் என்பது அப்போது தான் மனிதர்களுக்குப் புரியும்...” என்றார் ஞானகுரு.

குட்டி நீதிக் கதை

இந்த கதையை நீங்கள் ஏற்கெனவே படித்திருக்கலாம் என்றாலும் இந்த இடத்தில் ஞாபகப்படுத்த வேண்டியது அவசியம்.

புதிய கார் கேட்டு நச்சரித்துக்கொண்டிருந்த மகனிடம், ‘நீ யாரிடமாவது போய் 100 ரூபாய் வாங்கி வா, உன் ஆசையை நிறை வேற்றுகிறேன்...’ என்று கூறி அனுப்பினார்.

உடனே அவன் அம்மாவிடம் வாங்கிவந்தான். அந்த ரூபாயைக் கிழித்து கீழே போட்ட தந்தை, ‘உறவினர்கள் யாரிடமும் வாங்கக்கூடாது...’ என்று திருப்பியனுப்பினார்.

உடனே அவன் நண்பனிடம் பணம் வாங்கிவந்தான். ‘நண்பன், தெரிந்தவர்கள் என்று யாரிடமும் வாங்கக்கூடாது’ என்று அந்த பணத்தையும் கிழித்துப் போட்டார்.

எனவே பக்கத்து ஊருக்குப் போய் யாரிடமாவது பணம் வாங்கலாம் என்று நினைத்து பலரிடமும் கேட்டான். யாரும் தருவதாக இல்லை. அதனால் தன்னுடைய கைக்கடிகாரத்தை விற்று பணத்தைக் கொண்டுவந்தான்.

தந்தை அதை எதுவும் சொல்லாமல் கிழித்துப் போட்டு, ‘உன்னுடைய அல்லது என்னுடைய பொருட்கள் எதையும் விற்பனை செய்யாமல் பணம் வாங்கி வா’ என்று அனுப்பினார்.

மீண்டும் போய் யார், யாரிடமோ பணம் கேட்டுக்கொண்டு இருந்தான். அப்போது சாலையில் நின்றுகொண்டிருந்த ஒருவன், ‘என்னுடைய டூவீலர் பஞ்சராகி நிற்கிறது. பஞ்சர் போடும் கடை ஒரு மைல் தூரத்தில் இருக்கிறதாம். என்னால் தள்ளிக்கொண்டு போக முடியாது. நீ அங்கு வரையிலும் தள்ளிக்கொண்டு போனால் நான் நூறு ரூபாய் தருகிறேன்’ என்று கூறினான். இவனும் சந்தோஷமாக சம்மதித்தான்.

பஞ்சரான டூ வீலரை தள்ளிக்கொண்டு சென்ற நேரத்தில் தான், அது எத்தனை சிரமம் என்பது புரிந்தது. அது வரையிலும் வீட்டில் வண்டி பஞ்சர் என்றால் அப்படியே அங்கேயே நிறுத்திவிடுவான். வேலைக்காரர்கள் வந்து சரிசெய்து கொடுத்து விடுவார்கள். வண்டியை தள்ளிக்கொண்டு செல்வது சிரமமாக இருந்தாலும், பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற வெறியுடன் அதனை தள்ளிக்கொண்டு போய் கடையில் சேர்த்தான். அதற்குள் உடல் முழுவதும் தெப்பலாக நனைந்திருந்தான்.

நூறு ரூபாய் பணம் கிடைத்ததும் அதை ஓடோடி போய் அப்பாவிடம் கொடுத்தான். அந்த ரூபாயை வாங்கியதும் அப்பா வழக்கம்போல் கிழிக்க முயற்சிக்க, உடனே அவர் கையைப் பிடித்து தடுத்து நிறுத்தினான்.

‘இது நான் உழைத்து சம்பாதித்தது, இதை நீங்கள் கிழிக்கக்கூடாது’ என்றான். அந்த வார்த்தையைக் கேட்டதும் மகனை நெஞ்சோடு அணைத்துக்கொண்டார். உழைப்பின் அருமை தெரிந்தவன் வீண் செலவு செய்ய மாட்டான் என்பதே இந்த கதை சொல்லும் கருத்து.

“பணம் பற்றிய புரிதல் இல்லாத காரணங் களால் தான், நடுத்தர வர்க்கத்தினரும், ஏழைகளும் அடுத்த கட்டத்துக்கு வர முடியாமல் தடுமாறுகிறார்கள். பணக்காரப் பிள்ளைகள் நஷ்ட மடைந்தாலும், அதிலிருந்து மீண்டு விடுகிறார்கள், சிலர் ஒட்டுமொத்தமாக தொலைத்தும் விடுகிறார்கள்.”



## மந்திரச்சொல்

எத்தனை பெரிய வீட்டையும் திறப்பதற்கு சின்னஞ் சிறிய சாவி போதும். அப்படியே எல்லா பெரிய பிரச்னைகளுக்கும் தீர்வு சின்னதாகவே இருக்கும்.

# கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள், காதலர்கள் என உறவுகளுக்குள் எழும்

# குழப்பங்களுக்கு கவுன்சிலிங்...



**திருமணத்திற்கு முன்... திருமணத்திற்கு பின்...**

**சிறப்பு ஆலோசனைகள்**


தொடர்புக்கு

GG Relationship Counseling

+91 80725 89355